
கீதாசார்யன்






திருநீர்மலை ரங்கநாதன் (உத்ஸவர்)

கீதாசார்யன் - 11

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



"कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन।"

தொகுதி 1 | ஸித்தார்த்தி௵ | ஆவணிமீ | ஆக 79 | பகுதி 11



ஆசிரியர்

M. A. வேங்கடகிருஷ்ணன், M. A.

P. T. சுந்தர வரதன்
நிதிக் காப்பாளர்

N. கணபதி
விளம்பரப் பொறுப்பாளர்

7, தெற்கு மாட வீதி.
திருவல்லிக்கேணி : சென்னை-600005.

ஆண்டுச் சந்தா ரூ 10

விலை ரூ 1-00

ஸ்ரீமத் பகவத் கீதை

அத வ்யவஸதிதாந் த்ருஷ்ட்வா தார்த்தராஷ்ட்ரான் கபித்வஜ:
ப்ரவ்ருத்தே சஸ்த்ர ஸம்பாதே தனுருத்யம்ய பாண்டவ : (20)

பின்னர் வீரர்கள் ஆயுதங்களை வழங்கத் தலைப்பட்டவுடன் அணிவகுத்து நின்ற. திருதராஷ்ட்ரனுடைய பிள்ளைகளைக் கண்டவனாய் கையில் வில்லேந்தியவனாய், அனுமக் கொடி உடையவனாய் நின்ற அர்ஜுனன்—

ஹ்ருஷீகேசம் ததாவாக்யம் இதமாஹ மஹிபதே
ஸேநயோ ருபயோர் மத்யே ரதம் ஸ்த்தாபய மே அச்யுத (21)

இருடீகேசனிடம் இவ்வார்த்தைகளைக் கூறினான். "அச்சுதனே! இரண்டு சேனைகளுக்கும் இடையில் எனது தேரை நிறுத்துக,

யாவதேதாந் நிரீக்ஷேஹம் யோத்துகாமா நவஸ்த்திதாந்
கைர்மயாஸஹ யோத்தவ்யம் அஸ்மிந் ரணஸமுத்யமே (22)

போர் செய்யக்கருதி நிற்கின்ற இவர்களை நான் தெரிந்து கொள்வதற்காகவும், நான் யாருடன் போர் செய்ய வேண்டும் என்று தெரிந்து கொள்வதற்காகவும்;

யோத்ஸ்ய மாநாநவேக்ஷேஹம் ய ஏதே அத்ர ஸமாகதா ।
தார்த்தராஷ்ட்ரஸ்ய துர்புத்தேர்யுத்தே ப்ரியசிகீர்ஷவ : (23)

திருதராஷ்டிரனுடைய கெடுமதி படைத்த புத்திரனுக்கு உதவிபுரியக் கருதி போர்செய்ய வந்தவர்களாக இங்கு வந்துள்ளவர்களைக் காண்கிறேன்."

திவ்வியப் பிரபந்த ஞானமும் தற்காலத் தமிழ்ப்படிப்பும்

முன்பெல்லாம் தமிழ்ப் புலவர், அல்லது வித்வான் அல்லது பண்டிதர் பரீட்சைக்குப் படிக்கிறவர்கள் தங்கள் பாடத்தின் ஒரு பகுதியாக நாலாயிர திவ்யப்ரபந்தமும் ஈடு உரையும் படித்து வந்தார்கள். அவர்கள் ஒருவகையில் பாக்கியசாலிகள்.

பின்பு படிப்படியாக அது குறைக்கப்பட்டு முடிவாக ஒன்றுமில்லாமல் நிறுத்தப்பட்டு விட்டது. பிரபந்தம் பாடத் திட்டத்தில் அதிகமில்லை.

அஷ்டப் பிரபந்தத்தில் ஒரு நூல் அல்லது குலசேகராழ்வார் பாசுரங்களில் ஒரு பகுதி என்று எவை

தீபம் நா. பார்த்தசாரதி

யேனும் சில பாடல்களை மட்டும் பாடத்திட்டத்தில் சேர்த்துக் கண் துடைப்புச் செய்துவிடுகிறார்கள் இப்போது.

திவ்யப் பிரபந்தமோ, தமிழ்வளம் கொழிக்கும் வைணவ நூல்களோ அவ்வளவு தூரம் கட்டாயமாகப் பொருட்படுத்திப் படிக்க வேண்டியவை அல்ல என்பது போல் ஒரு மனப்பான்மை வளர்ந்துவருகிறது. சிலர் இப்படி ஒரு பிரசாரத்தில் கூட இறங்கியிருக்கிறார்கள். இது வருந்தத் தக்கது மட்டுமில்லை கண்டிக்கத்தக்கதும் ஆகும். ஆனால் யாரும் கண்டிக்கமுன் வரவில்லை. வரலாற்றுக் கண்ணோட்டத்திலும் கலாசாரக் கண்ணோட்டத்திலுமாவது சில அம்சங்களை ஒரு வித்துவான் தவறாமல் படித்தாக வேண்டும்,

சமயம், பக்தி, பழமையோடு தொடர்புடையவை எதுவுமே தமிழாக இருக்கமுடியாது என்றும் அப்படித்

தொடர்பு உடையவை மிகவும் சுமாரானவையாகவே இருக்க முடியும் என்பது போலவும் ஒரு தப்பபிப்ராயம் எப்படியோ தற்காலத்தில் சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரி அபிப்ராயத்தைப் போல் அறியாமையும் மௌடீகமும் வேறொன்று இருக்க முடியாது. எப்படி என்று பார்க்கலாம்?

திவ்யப் பிரபந்தம் நமது கலாசாரச் செல்வம். ஞானநிதி. தேசசம்பத்து தமிழ் மொழியின் பாக்கியம். கம்பனும் பிரபந்தங்களும் இல்லாமற் போயிருக்குமானால் தமிழின் ஓர் அழகிய பகுதியே இல்லையாகியிருக்கும். நம் இளைஞர்களும், இளைஞர்களுக்குக் கற்பிப்பதற்குப் பொறுப்பு ஏற்க இருக்கும் தமிழாசிரியர்களும் ஆழ்வார்களின் அருந்தமிழை நீக்கிவிட்டுப் படிக்கும் தமிழ்ப் படிப்பால் பெருத்த நஷ்டமே அடைகிறார்கள் என்பது என் கருத்து.

இலக்கியம், காலத்தையும் தான் தோன்றிய சூழ்நிலையையும் காட்டும் கண்ணாடியாகும். மணிப்ரவாளமும், ஈட்டின் நடையும் இன்று உவப்பாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் காமதேனு, யாளி, புருஷாமிருகம் என்பனபோல் ஓர் அபூர்வச் சேர்க்கையாக அது ஒரு காலத்தில் விளங்கியிருக்கிறது.

ஒரு காலத்தின் அபூர்வப் பண்டங்களுக்கு ‘Antique value’ கொடுத்து மியூஸியத்தில் வைத்து வரலாற்றுக் கோணத்தில் காண்பதுபோல் ‘ஈடு’ம் பார்க்கப்பட வேண்டும். ஈட்டைப் போல் நடைதான் எதிர் காலத்தில் பரவ வேண்டும் என்பதற்காக அன்று. இருமொழி வல்லுநர்கள் (உபய பாஷாப்ரவீணர்கள்) எப்படி நடையை (Hybrid language) ஒரு காலத்தில் கையாண்டுள்ளனர் என்னும் வரலாற்று உண்மைக்காகவாவது ஈடுபோற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும். வரலாற்றுக் கண்ணோட்டமும் இன்றிக் கலாசாரக் கண்ணோட்டமும் இன்றிப் பழையவற்றை இனம்புரியாத வெறுப்பின் அடிப்படையில் புறக்கணிப்பது விவேகமாகாது.

இந்த விவேகமற்ற செயல்தான் தமிழ்நாட்டில் இப்போது அதிகமாக நடைபெறுவதாகத் தோன்றுகிறது.

இல்லாவிட்டால் தற்காலத் தமிழ்ப்படிப்பின் எந்த நிலையிலும் எந்த முனையிலும் பிரபந்த ஞானத்துக்கு வழியே இல்லாமற் செய்திருப்பார்களா? அறிஞர்களும், வைணவ சம்பிரதாயப் பெரியோர்களும் இதைப்பற்றி அக்கறையோடும் கவலையோடும் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சமயங்கள் இல்லாமல் தமிழ் வளர்ச்சி இல்லை. வைணவ, சைவ, சமணசமய இலக்கியங்களை நீக்கிவிட்டால் தமிழில் வேறென்ன மீதமிருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இப்படிச் சிந்தித்துப் பாக்காமல் சமயவெறுப்போடு தமிழை அணுகுகிறவர்களே இன்று அதிகமாக இருக்கிறார்கள். நம் அறிவாளிகளைப் பீடித்திருக்கும் புதுவகை நோய்களில் காரணமற்ற சமய எதிர்ப்பு உணர்ச்சியும் ஒன்று. காரணம் புரியாத சமய எதிர்ப்பு உணர்வால்தான் பிரபந்தங்கள், தேவார திருவாசகம் போன்றவை தவிர்க்கப்படுகின்றன. வளமான தமிழின் நலமான பகுதிகள் மாணவர்க்கு மறுக்கப்படுகின்றன. செறிவும், அழகும், நயமும், நலமும் உள்ள மொழி நடை ஆழ்வார்களின் அருந்தமிழ்ப் பாடல்களில் தான் இருக்கிறது என்பதை இன்றைய மாணவர்கள் அறியவிடாமற் செய்வதைவிடப் பெரிய பாவம் வேறெதுவும் இருக்கமுடியாது என்பது என் கருத்து. தற்காலத் தமிழ்ப்படிப்புக்குப் பாடத் திட்டம் வகுப்போர் இனியாவது இதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

தவிர்க்க முடியாத சில காரணங்களால் இம்மாதம் K. R. ஸ்ரீனிவாஸாச்சாரியாரின் "எங்கள் சாளக்கிராம யாத்திரை" என்ற கட்டுரைத் தொடரை வெளியிட முடியவில்லை அடுத்த இதழ் முதல் அக்கட்டுரை தொடர்ந்து வெளிவரும்.

திருநீர்மலை

T. A. பாஷ்யம்

பார்த்தன் : கண்ணா, உனது பேருபகாரத்தினால் இன்று அதிகாலை சென்னையிலிருந்து புறப்பட்டு திருநின்றவூர் திரு எவ்வுளூர் ஆகிய இரண்டு திவ்ய தேசங்களையும் நன்கு அனுபவித்து சேவித்து மீண்டும் சென்னை திரும்பி விட்டோம். இன்று மாலை மிக அருகிலுள்ள பிறிதொரு திவ்ய தேசம் ஒன்றினை ஸேவிக்க முடியுமா ?

கண்ணன் : முடியும் பார்த்தா. பார்த்தாயா! திவ்ய தேச அனுபவத்தின் ருசியினை. இரண்டு திவ்ய தேசங்கள் தான் ஸேவித்து விட்டோமே. போதுமே என்று எண்ணாமல் மேலும் மேலும் திவ்ய தேசங்கள் சென்று ஸேவிக்க முடியுமா என்று உன்னைக் கேட்கும்படி ஆக்கிவிட்ட உன் நெஞ்சினை "நெஞ்சமே நல்லை நல்லை உன்னைப் பெற்றால் என் செய்வோம்" என நம்மாழ்வார் வாக்கிற்கு ஒப்புமையாக்கலாம்படி உள்ளது உனது எண்ணப்படியே இப்போது நாம் "திருநீர் மலை" எனும் திவ்ய தேசத்திற்குச் செல்வோம். வா.

பார்த்தன் : அப்படியா. இப்போதே நாம் திருநீர்மலை செல்ல முடியுமோ ?

கண்ணன் . ஆஹா ! திருநீர்மலை எனும் திவ்ய தேசம் சென்னை தாம்பரம் ரயில் மார்க்கத்தில் பல்லாவரம் எனும் ஊரிலிருந்து 3 மைல் தொலைவில் உள்ளது. சென்னையிலிருந்து **எலக்ட்ரிக் ரயிலில்** பல்லாவரம் சென்று அங்கிருந்து வேறு பஸ் பிடித்து இந்தத் திருநீர்மலையை அடையலாம். அல்லது சென்னை பிராட்வே பஸ் ஸ்டாண்டிலிருந்து திருநீர்மலைக்கே செல்லும் பஸ்ஸிலும் செல்லலாம். நாம் பஸ்ஸில் போவது தான் உசிதம். ஆதலால் பஸ்ஸிலேயே போவோம்.

பார்த்தன் : பஸ்ஸில் நாம் போய் சேர எவ்வளவு நேரம் ஆகும் ?

கண்ணன் : சுமார் ஒரு மணி நேரத்திற்குள் போய்ச் சேரலாம். அதற்குள் இந்த திவ்ய தேசம் பற்றி சிற்சில விஷயங்களை உனக்கு வழக்கம் போல் சொல்லட்டுமா ?

பார்த்தன் : கரும்பு தின்னக் கூலியா. சொல் கண்ணா. கேட்க சித்தமாய் உள்ளேன்.

கண்ணன் : இந்த திவ்ய தேசமானது ஒரு சிறிய மலை மேல் உள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமான் கருணைக் கடலான ஸ்ரீரங்கநாதன். எம்பெருமான் ஆதிசேஷன் மீது அறிதுயில் கொண்டு சயனத் திருக்கோலத்தில் உள்ளான். இந்த க்ஷேத்திரத்தில் மலைமீது ஒரு ஸன்னிதியும் மலையடிவாரத்தில் மற்றொரு ஸன்னிதியுமாக இரண்டு திருக்கோயில்கள் உள்ளன.

பார்த்தன் : மலை மிக உயரமானதா ? மலைமீது ஏறுவது கஷ்டமாக இருக்குமா ?

கண்ணன் : இல்லை பார்த்தா. மலை சுமார் 200 அடி உயரத்தில்தான் உள்ளது. சுமார் 250 படிகள் ஏற வேண்டும். படிகள் எல்லாம் நன்கு செப்பனிடப்பட்டு நன்முறையில் உள்ளது. ஏறுவது மிகமிக சுலபம்.

பார்த்தன் : இரண்டு திருக்கோயில் உள்ளதாகச் சொன்னாயே கண்ணா ? அது என்ன ?

கண்ணன் : இந்தத் திருநீர்மலையில் மலைமீது பிரதான ஸன்னிதியான ஸ்ரீரங்கநாதன் ஸன்னிதி அமைந்துள்ளது. எம்பெருமான் திவ்ய தேசங்கள் தோறும் எழுந்தருளியுள்ள நிலைகள் 'நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான்' எனும்

இந்த நான்கினுள் ஏதாவது ஒரு நிலையில் இருக்கும். ஆனால் இந்த திவ்ய தேசத்திலேயோ இந்த நான்கு நிலைகளிலும் எம் பெருமான் ஸேவை தருகின்றான். நான் முதலில் கூறிய இந்த திவ்ய தேசத்து நாயகனான ஸ்ரீரங்கனாதன் மலைமீது உள்ள ஸன்னிதியில் "கிடந்தான்" எனும் நிலைக்கு ஏற்ப ஸ்ரீரங்க விமானத்தில் சயனித்துள்ளான். இந்த ஸன்னிதியின் ப்ரதக்ஷிணத்தில் கிழக்கு ப்ராகாரத்தில் முதலில் உள்ள மிகச் சிறிய ஸன்னிதியில ப்ரம்மாண்ட விமானத்தில் "நடந்தான்" எனும் நிலைக்கு ஏற்ப எம்பெருமான் திரிவிக்கிரமனாகக் காட்சி தருகின்றான். அதனை அடுத்து அதே கிழக்குப் ப்ராகாரத்தில் பிறிதொரு மிகச் சிறிய ஸன்னிதியில் சாந்த விமானத்தில் "இருந்தான்" எனும் நிலைக்கு ஏற்ப எம்பெருமான் நரசிம்ம மூர்த்தியாக வீற்றிருந்து அற்புதமாக ஸேவை தருகின்றான். இந்த ஸன்னிதிகள் தவிர மலைமீது ஸ்ரீரங்க நாயகியான தாயார் ஸன்னிதியும் தனியாக உள்ளது. மலையடிவாரத்தில் உள்ள கோயிலில் எம்பெருமான் "நின்றான்" என்னும் நிலைக்கு ஏற்ப 'நீர்வண்ணன்" எனும் திருநாமத்தோடு புஷ்பக விமானத்தின் அடியில் நின்று ஸேவை தருகின்றான். மலையடிவாரத்தில் உள்ள இந்த ஸன்னிதியில்தான் ஸ்ரீரங்கனாதன் உத்ஸவரும் எழுந்தருளியிருக்கின்றார். மேலும் ஆண்டாள், அணிமாமலர் மங்கைத் தாயார், ஸ்ரீராமர் ஸன்னிதி, திருப்பள்ளி அறை, ஆழ்வார்கள் — ஆசார்யர்கள் ஸன்னிதி ஆகிய ஸன்னிதிகளும் உள்ளன. இந்த ஸன்னிதிக்கு பின்புறம்தான் "க்ஷீரபுஷ்கரிணீ" எனும் திருக்குளம் உள்ளது.

பார்த்தன்: நீ சொல்வதை எல்லாம் கேட்கும்போது இந்த ஸந்நிதிகள் அனைத்தையும் இப்போது ஸேவித்து விட்டு இன்று இரவே திரும்பிவிட முடியாது போல் தோன்றுகிறதே கண்ணா!

கண்ணன் : இல்லை பார்த்தா. நிச்சயமாய் நாம் எல்லா ஸன்னிதிகளையும் இன்றே நன்கு ஸேவித்து திரும்பலாம். எம்பெருமான் துணை தான் உள்ளதே. ஏன் கவலைப்படுகிறாய் ?

பார்த்தன் : இதோ திருக்குளமும் மலைமேல் கோயிலும் தென்படுகிறதே. இதுதான் திருநீர்மலையா ?

கண்ணன் : ஆம் இங்குதான் நாம் இறங்கவேண்டும்.

பார்த்தன் : திருக்குளத்தின் பெயருக்கு ஏற்ப பெரிய புஷ்கரிணியாகவேயன்றோ உள்ளது! சரி. மலைமீது ஏறி பெருமாளை ஸேவிக்கலாம். இந்த எம்பெருமானை திவ்யதேச எம்பெருமானாக ஆக்கிய ஆழ்வார்கள் யார் யார்?

கண்ணன் : பூதத்தாழ்வார் தமது திருவந்தாதியில் "பயின்றதரங்கம்....அணிநீர்மலையே" (4-6) என்று மங்களாசாஸனம் செய்துள்ளார். திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி(2-4)யில் ஒரு பதிகத்தால் மங்களாசாஸனம் செய்துள்ளார். இது தவிர தமது திருமொழியாயிரத்திலும் ஆங்காங்கே பல பாசுரங்களை அருளிச் செய்திருக்கிறார். அப்போது அவர் **"நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தார்க்கு இடம் மாமலையாவது நீர்மலையே !"** என்று அருளிச் செய்துள்ளதற்கு ஏற்ப தற்போது இந்நான்கு நிலைகளிலும் எம்பெருமான்கள் ஸேவை ஸாதிக்கின்றனர். ஆனால் வேறொரு பாசுரத்தில் அவர் **"நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன்"** என்று பாடியுள்ளதைக் கொண்டு இங்கு எழுந்தருளியிருக்கும் நீர்வண்ணனே ப்ராசீன எம்பெருமான் என்று கூறுவர். ஆனால் இந்த மலைமேல் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கநாதனே இப்போது ப்ரதான பெருமாள்.

பார்த்தன் : இம்மலைக்கு நீர்மலை என்று பெயர்வரக் காரணம் என்னவென்று கூறவில்லையே !

கண்ணன்: இவ்வூரை மங்களாசாஸனம் செய்ய திருமங்கையாழ்வார் எழுந்தருளியிருந்தபோது மலையைச் சுற்றிலும் நீர் அரண்போல் சூழ்ந்திருந்ததாம். எனவே அவர் பெருமாளை ஸேவிக்க முடியாமல் 6 மாத காலம் ஊருக்கு வெளியே காத்திருந்தாராம். (அந்த ஆழ்வார் எழுந்தருளியிருந்த இடம் இன்றும் 'திருமங்கை ஆழ்வார் புரம்' என்றே வழங்கப்படுகிறது.) இப்படி நீர், மலையை அரணாகச் சூழ்ந்திருந்தபடியால் இம்மலைக்கு நீர்மலை என்றே பெயர் ஏற்பட்டது.

பார்த்தன்: ஆஹா! அதற்குள் மலைமீது ஏறிவிட்டோமே. ஆழ்வார்களைப் பற்றியும் எம்பெருமானைப்பற்றியும் பேசிக்கொண்டே வந்ததில் மலையேறின சிரமம் துளிகூடத் தெரியவில்லையே. ஸன்னிதிக்குள் நுழைவோம்.

தொடர்ச்சி 41ம் பக்கம்)

முக்கிய அறிவிப்பு

கீழ்க்கண்ட எண்களையுடைய சந்தாதாரர்களின் சந்தா அடுத்த மாதத்துடன் (புரட்டாசி) முடிவடைகிறது. உடனே அவர்கள் தங்கள் சந்தாப் பணத்தைச் (ரூ 10/-) செலுத்தி புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1 to 134, 136 to 211, 213 to 235, 237 to 259, 261 to 263, 265 to 268‘ 273, 289, 294, 300 to 328, 330 to 343, 354, 383. (அவரவர்கள் தங்கள் தங்கள் சந்தா எண்களை இம்மாத கீதாசார்யன் உறையில் காணலாம்) சந்தா செலுத்தும் போது உங்கள் சந்தா எண்களைத் தவறாமல் குறிப்பிடுங்கள்.

ஸ்ரீ பாஷ்ய ஸாரம்

ப்ரஹ்மஸூத்ரத்தில் முதல் அதிகரணம் ஜிஜ்ஞாஸாதி கரண மெனப்படும், "அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" என்பது ஸூத்ரம். அத = கர்ம விசாரம் செய்து முடிந்த பிறகு, அத: = கர்மவிசாரம் முடிந்த காரணத்தினலேயே, ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா = இச்சைக்கு இலக்கான ப்ரஹ்ம விசாரம் (செய்யத்தக்கது) என்று ஸூத்திரத்தின் மேல் பொருள் அறிக. கர்ம விசாரத்தைச் செய்து முடித்தவர்கள் அந்தக் கருமங்களினுடைய அற்பமும் அஸ்திரமுமான பலன்களில் நசையொழிந்து மோக்ஷ புருஷார்த்தத்தை விரும்புவர்களாதலால் அப்படிப் பட்டவர்களுக்கு ப்ரஹ்ம விசாரம் செய்யத் தக்கது

P.B. அண்ணங்கராசாரியர்

என்றதாயிற்று. இதை இன்னமும் சிறிது விவரிப்போம். நன்ருக வேதமோதின வொருவர் ஜைமினி மஹர்ஷியின் கர்ம மீமாம்ஸையில் சொல்லப்பட்ட ந்யாயங்களினல் ஜ்யோதிஷ்டோமம் முதலிய யஜ்ஞங்களின் (கருமங்களின்) தன்மை இன்னபடிப்பட்டது, அவற்றை யியற்ற வேண்டிய விதமின்னது அவற்றின் பலனன ஸ்வர்க்கம் முதலியவற்றின் ஸ்வரூபம் இத்தகைத்து என்று இவ்விஷயங்களை அறுதியிடப் பெற்ற ஸ்வர்க்கம் முதலிய அந்தப் பலன்கள் நச்வரங்கள் என்று தெரிந்து கொண்டதன் பலனக அவற்றைப் பெற வேணுமென்கிற விருப்பம் தொலைந்தொழியப் பெறுகின்ருர். பரப்ரஹ்ம ப்ராப்தியாகிற மோக்ஷ புருஷார்த்தத்தில் மேலெழுந்தவொரு உணர்ச்சியிருப்பதனல் இதனைப் பெற வேணுமென்கிற விருப்பமும் அவர்க்கு உண்டாகின்றது. இப்படிப் ப்ரஹ்ம ப்ராப்தி

யில் விருப்பமுண்டானவாறே, 'அந்த ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் இப்படிப்பட்டது, அதனைப் பெறுதற்கு உபாயமின்னது, பெற்று அநுபவிக்கும் பலன் இன்னபடிப்பட்டது என்றித்தகைய விஷயங்களை நிர்ணயிக்கவேண்டுமாதலால் இந்த நிர்ணயம் ப்ரஹ்ம மீமாம்ஸையிற் சொல்லப்பட்டுள்ள நியாயங்களினாலேயே விளையக் கூடியது என்றதாகத் தேறி நின்றது. *அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா* என்கிற இந்த ஸூத்திரத்திற்கு இவ்வளவே விஷயமாயிருக்க, இங்கு ஸ்ரீபாஷ்யம் மிக மிக வளர்ந்திருக்கின்றதே: அவ்வளவு விரிவுக்கு விஷயமென்ன? என்று பலர் அறிய விரும்பக் கூடும். கேண்மின். இந்த ஸூத்திரத்தில் மூன்றே பதங்கள் உள்ளன, (அத) என்கிற முதல் பதத்திற்கு 'அதற்குப் பிறகு' என்று அர்த்தம். 'எதற்குப் பிறகு?' என்று கேள்வி உடனே உண்டாகின்றது. 'கர்ம விசாரம் செய்து முடிந்த பிறகு' என்று நாம் அர்த்தம் சொன்னோம். பிறர் இங்ஙனே கொள்ளாமல் வேறு அர்த்தம் கொள்ளுகின்றனர். ஸாதந ஸம்பத்தியின் ஆநந்தர்யமே அதச்ப்தார்த்தமென்று சங்கர பாஷ்யத்திலுள்ளது. அது பொருந்தாதென்று மறுக்க அவசியம் ஏற்பட்டது. ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தைப்பற்றிப் பிறர் கூறுவதும் அவசியம் மறுக்க வேண்டியதாயிற்று. இவ்விரண்டு விஷயங்களில் ப்ரஸக்தாநுப்ரஸக்தமாகப் பல பல விஷயங்கள் பெருகினபடியால் இவ்விடத்து ஸ்ரீபாஷ்யம் மிக வளர்ந்தது. அவ்விரிவு இங்கு வேண்டாவென்று விடுக்கப்பட்டது. ஸூத்திரத்தின்மேல் இங்குத் தோன்றியுள்ள பூர்வபக்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் ஸாரமாக வுணர்த்துகிறோம், உணர்க.

இவ்வதிகரணத்தின் பூர்வபக்ஷம் வருமாறு:—கர்ம மீமாம்ஸையில் அர்த்தவாதாதிகரணத்தில் " ஆம்நாயஸ்ய க்ரியார்த்தத்வாத் ஆநர்த்தக்யம் அததர்த்தாநாம் தஸ்மாதநித்யமுச்யதே " என்கிற வொரு ஸூத்திரத்தினால் ஒரு பூர்வபக்ஷம் கிளப்பப்பட்டது; அதாவது—வேத ஸாமாந்யமும் ஏதேனுமொரு கார்யத்தைச் செய்யவேண்டியதாக வுணர்த்தித் தீரவேண்டிய நிர்ப்பந்த

முடையது; அதைச் செய் இதைச் செய் என்று கர்த்தவ்யார்த் தங்களை நியமேந போதிப்பதே வேதங்களின் க்ருதயம் அர்த்த வாத ரூபங்களான வேறு வாக்யங்ளளானவை கர்த்தவ்யார்த்த மொன்றையும் போதிக்காமையினுலே அப்படிப்பட்ட வாக் யங்களுக்கு ப்ராமாண்யம் ஸம்பவிக்க மாட்டாது. (இதைச் சிறிது விவரிப்போம்–) "வாயவ்யம் ச்வேதமாலபேத பூதி காம:" என்பது ஒரு வேத வாக்யம். இதில் ஒரு கர்த்தவ்ய மாக விதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அடுத்த வாக்யம் 'வாயுர்வை க்ஷேபிஷ்டா தேவதா' என்பது. முன் சொன்ன கருமத்தில் ஆராத்யமான வாயுதேவதையின் ஒரு பெருமை யைப் புகழ்ந்து கூறுவது இந்த வாக்யம். "வாயு மிகவும் சீக் கிரமாகப் பயனளிக்க வல்ல தேவதை" என்பது இந்த வாக் யத்தின் அர்த்தம். இப்படிப்பட்ட வாக்யங்களுக்கு அர்த்த வாத வாக்யமென்று பெயர். இவற்றில் கர்மவிதி ஒன்றுமில் லாமையால் இவை விதிவாக்யங்களல்ல. விதிவாக்யமாயி ருந்து கொண்டே ப்ராமாண்யம் பெற மாட்டா—என்கிற பூர்வபக்ஷம் * ஆம்நாயஸ்யேதி ஸூத்திரத்தினுல் கிளப்பப் பட் டது. பிறகு 'விதிநாது ஏகவாக்யத்வாத ஸ்துத்யர்த்தேந விதீநாம் ஸ்யு:" என்கிற ஸூத்திரத்தினுல் இதற்குப் பரிஹா ரம் சொல்லப்பட்டது. எங்ஙனே யென்னில், அர்த்தவாத வாக்யங்கள் ஒரு காரியத்தைச் செய்யும்படி விதிக்காமற் போனுலும் ஸமீபத்திலுள்ள விதிவாக்யத்தில் விதிக்கப்பட்ட தொரு க்ரியையில் அந்வயிக்கின்ற புகழ்ச்சியைத் தெரிவிப்பத னுல் அந்த விதிவாக்யத்தோடுகூட ஏக வாக்யமாய்க் கொண்டு ப்ராமாண்யம் பெறத் தட்டில்லையென்று ஸித்தாந்தம் செய்யப் பட்டது ஜைமினி மஹர்ஷியால். ஆக, விதிவாக்வங்களுக்கோ அவற்றுக்கு சேஷ பூதங்களான வாக்யங்களுக்கோ ப்ராமாண்ய முண்டேயல்லது வேறுவகையான வாக்யங்களுக்கு ப்ராமாண் யம் கிடையாது. உலகத்திலும் முதன் முதலாகச் சிறுவர்களுக்கு வ்ருத்தவ்யவஹாரத்தினுலேயே சக்திக்ரஹண முண்டாகிறது. [சக்திக்ரஹணமாவது—இன்னபதத்திற்கு இன்னது அர்த்த மென்கிறவுணர்ச்சி] வ்யுத்பந்நனை வொருவன் வேறொரு

வ்யுத்பந்நனை நோக்கி 'காம் ஆநய' என்கிறன். அதைக் கேட்ட அவன் ஒரு கோவைக் கொண்டு போகிறன். மறுபடியும் அவன் "காம் நய, அச்வம் ஆநய" என்கிறன் அதைக்கேட்ட அந்த வ்யுத்பந்நன் கோவைக் கொண்டு போய்க் கட்டிவிட்டுக் குதிரையைக் கொண்டு வருகிறன். இவற்றைக கண்டு கொண்டிருந்த வொரு சிறுவன் (காம்) என்றதற்கு இன்னது பொருள், (ஆநய) என்பதற்கு இன்னது பொருள், (நய) என்றதற்கு இன்னது பொருள்; அச்வமென்றதற்கு இன்னது பொருளென்று அங்கு நடந்த காரியங்களினல் தெரிந்து கொள்ளுகிறன். 'கோ' பதமானது கொண்டுவருதல் கொண்டுபோதல் என்கிற இரண்டு க்ரியைகளில் அந்வயிக்கின்ற வஸ்துவைப் போதிப்பதனலே பசுவைச் சொல்லுகின்றது, ஆநய என்கிற பதம் கொண்டுவருவதாகிற க்ரியையைச் சொல்லுமது என்றிப்படி அந்தந்த பதங்களுக்கு சக்தியை க்ரஹிக்கின்றன், எங்கும் இப்படிப்பட்ட வ்யவஹாரங்களினலேயே அவ்வோ பதங்களுக்கு அவ்வோ அர்த்தங்களில் சக்தி க்ரஹண முண்டாகிறது. ஆகவே இப்படிப்பட்ட வ்யவஹாரங்களெல்லாம் ஏதேனுமொரு கார்யார்த்த பரங்களாகவே காணப்படுதலால் உலகில் எல்லாப் பதங்களும் யத்கிஞ்சித் கர்த்தவ்யார்த்த பரங்களாகவே யென்று நிச்சயிக்கிறன். ஆக இப்படிப்பட்ட வ்யுத்பத்திக்கு இணங்க எல்லாப் பதங்களும் கார்யார்த்தபரங்களே. இப்படி லௌகிக பதங்கள் கார்ய பரங்களென்று தேறினல் 'ய ஏவ லௌகிகா : த ஏவ வைதிகா:' என்கிற ந்யாயத்தாலே வைதிக பதங்களும் கார்ய பரங்களேயாகும். (கார்ய பரங்களான வாக்யங்களுக்கே ப்ராமாண்யமுண்டு என்றபடி) ஏவஞ்ச, கார்ய ரூபமல்லாத பரப்ரஹ்மத்தினிடத்தில் வேதாந்த வாக்யங்களுக்குத் தாத்பர்யமிருக்க முடியாமையினலே வேதாந்த விசார ரூபமான ப்ரஹ்ம விசார சாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தக்கதன்று—என்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாயிற்று.

இதன்மேல் ஸித்தாந்தம் வருமாறு.—சிறுவர்களுக்கு முதல் வ்யுத்பத்தி வ்ருத்தவ்யவஹாரத்திலேயே உண்டாகிறது என்பது பிசகு; இது எல்லாருடையவும் அநுபவத்திற்கு விருத்தமானது. உலகில் அவரவர்களுக்கு முதல்வ்யுத்பத்தி உண்டாகிற விதம் வேறு வகையாகவே அநுபவ ஸித்தமாகவுள்ளது. எங்ஙனேயென்னில், தந்தை தாய் முதலியவர்கள் தம்தம் சிறுவர்களுக்கு வ்யுத்பத்தியை யுண்டுபண்ணவேண்டி கண்ணிற் காணும் பல பல பொருள்களை விரலால் சுட்டிக்காட்டி 'இதோ சந்திரன், இதோ கிளி, இதோ குதிரை, இதோ மாமா' என்றிப்படி ப்ரயோகித்து வருகிறார்கள். சிசுக்களும் பூர்வ ஜன்ம வாஸனையில் காலக்ரமேண அவ்வோ பதங்களுக்கும் அவ்வோ அர்த்தங்களுக்குமுள்ள ஸம்பந்தத்தைத் திடமாக வுணர்ந்து வ்யுத்பத்தி பெறுகின்றன. ஒரு கார்யத்தில் அந்வயித்த வஸ்துவிலேயே முதன்முதலாக சக்தி க்ரஹணமுண்டாகிறதென்றதற்கு முரணாக ஒரு கார்யத்திலும் அந்வயியாத வஸ்துவிலேயே முதன் முதலாகப் பதங்களுக்கு சக்திரஹண முண்டாகிறதென்று மூதலிக்கப்பட்டது.

(தொடரும்)

ஸ்ரீராமானுஜர் அருளிச் செய்த

ஸ்ரீபாஷ்யம்

தமிழாக்கம் கு. சந்தானம்

உலகனைத்தும் ஆக்கிக் காத்து அழித்து விளையாடுவோனே! பலவித, பணிந்த உயிர்களை உய்விக்க உறுதியுடையோனே! மறைமீது விளங்கும் பிரம்மமான ஸ்ரீநிவாஸனே பரமனே எனக்கு ஞானத்துடன் கூடிய பக்தியருள்வாய்!

பராசர புத்திரன் சொல்லமுதத்தை, உபநிஷத்துக்களான பாற்கடல் நடுவிலிருந்து எடுத்ததை, பிறவித் தீயால் வெந்து வேகும் ஜீவாத்மாக்களின் அருமருந்தை, முந்திய குருக்கள் பேணிப் பாதுகாத்த பொக்கிஷத்தை, மந்தமதிகளால் சீர்குலைந்து வெகுதூரத்திலிருந்ததை, எனது மொழிகளால் அருகில் வைகிய அமிர்தத்தை, தினந்தோறும் பூமியில் நல்லோரனைவரும் அருந்துவாராக!

முதல் அத்தியாயம் — முதல் பாதம்

ஜிஜ்ஞாஸா அதிகரணம் (அறியும் ஆவல்)

பகவான் போதாயன மஹரிஷியால் இயற்றப்பட்ட விரிவான பிரம்ம சூத்திர வியாக்கியானத்தை முந்திய ஆசாரியர்கள் சுருங்க வைத்து விளக்கினர்கள். அவர் சிந்தனைகளை அனுசரித்து சூத்திர பதங்கள் வியாக்கியானம் செய்யப்படுகின்றன.

अथातो ब्रह्म जिज्ञासा। அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா

இனி, ஆதலால் பிரம்மஞான ஆவல்

இங்கு अथ (இனி) என்ற பதம் முன் சென்ற பொருளைக் குறிக்கின்றது. अतः (ஆதலால்) என்பது அப்பொருள் காரண மாவதைக் கூறுகிறது. வேத — வேதாந்தங்களை அங்கங்க ளோடு ஓதி, அவற்றால் கிடைக்கும் கர்ம ஞானங்களின் பலன் கள் நிலையற்றவை என்று உணர்ந்தால், அவற்றிற்குப் பின் தோன்றுவது நித்ய பலமான மோக்ஷத்தைத் தரவல்ல பிரம் மத்தை அறியும் ஆவல். பிரம்மத்தினுடைய ஞானத்தின் ஆவல் பிரம்மஞான ஆவல். பிரம்ம பதத்தால், தனது இயற் கையால் எவ்விதக் குறையுமின்றி, எல்லையற்ற அதிசய அளவில்லாத நற்குணக் குன்றான புருஷோத்தமன் குறிப்பிடப் படுகின்றான். எவ்விதத்தாலும் பெருங்குணமுள்ளதால் பிரம்ம பதம், பெருமை என்பது சுய சொரூபத்தாலும் குணங் களாலும் அளவற்ற எல்லையற்ற அதிசயமாக விருப்பதே அதன் முக்கியப் பொருள். அது ஸர்வேச்வரனையே சாரும். ஆதலால் பிரம்ம சப்தம் அவனிடத்திலேயே பொருந்தும். ஆகையால், வேறிடங்களில், குணங்கள் சிறிதளவு இருக்கு மிடங்களில், பிரம்ம பதத்தைப் பிரயோகிப்பது மிகைப் படுத்துவதற்காகவே. அதற்குப் பல அர்த்தங்களைக் கொடுப் பது தகாது; பகவான் என்கிற பதம் போல. ஆகையால் ஸர்வேச்வரனே அறியும் ஆவலுக்கு இலக்கான பிரம்மம். ஞானத்தின் விருப்பமே ஜிஜ்ஞாஸா. விரும்பப்படும் பொருளே விருப்பத்தில் முக்கியமானதால் அது ஞானமென்று இங்கு குறிப்பிடப்படுகின்றது.

வேத விசாரணையின் முதல் பாகத்தின் அறிவால் யக்ஞ கர்மங்களின் பலன் அல்பமானதும் நிலையற்றதுமாக இருப்ப தால், முன் சென்ற கர்ம ஞானத்திற்குப் பின் அதே காரணத் தால் பிரம்மம் அறியப்பட வேண்டும் என்பது புலப்படுகிறது; விருத்திகாரர் போதாயனர் இதைப் பற்றிக் கூறியுள்ளார். "முடிந்த கர்ம விசாரணைக்குப்பின் பிரம்மத்தை அறியும் விருப்பம்" என்று; "கர்ம பிரம்ம விசாரணைகள் இரண்டும்

ஓர் ஆராய்ச்சியே'' என்று மேலும் கூறுகிறார். 'இந்த சாரீரகம் ஜைமினியின் பதினாறு அத்யாயங்கள் கொண்ட கர்ம மீமாம்ஸையுடன் சேர்ந்து ஒரே சாஸ்திரமாகும்'' ஆதலால் ஒரு பொருளை ஆராய்வோரின் கருத்துப் பிரிவுகளால், கீதையில் மூன்று ஆறு அத்தியாயங்களைப் போலவும், தனி அத்தியாயங்களைப் போலவும், பூர்வ (முன்), உத்தர (பின்) மீமாம்ஸைகளின் பேதமாகும். முழு மீமாம்ஸா சாஸ்திரமும் ''அதாதோ தர்ம ஜிஜ்ஞாஸா'' (இனி ஆதலால் தர்மத்தை அறிய ஆவல்) என்று ஆரம்பித்து, **அநாவ்ருத்தி ஃ சப்தாத், அநாவ்ருத்தி, சப்தாத்'' (வேத வாக்கால் மறுபிறப்பின்மை, வேதவாக்கால் மறுபிறப்பின்மை)**, என்ற முடிவான சூத்திரம் வரையில் பொருளின் தன்மையால் முறைப்படி வகுக்கப் பட்டிருக்கிறது. அவ்வாறே முதன் முதலாக வேதமே மனப் பாடம் செய்யப்பட வேண்டும் என்று, வேதம் என்கிற சொல் தொகுதியே மனப்பாடம் செய்யப்பட வேண்டும் என்று விதிக்கப்படுகிறது.

அந்த மனப்பாடம் எத்தன்மையது' எவ்விதம் செய்யத் தகுந்தது என்கிற கேள்விகளுக்கு, ''எட்டு வயதுள்ள பிராம் மணனை பூணூல் தரிக்கச் செய்து பாடம் கற்பிக்க வேண்டும் என்றும், சிராவணத்தில் புரோஷ்டபத நக்ஷத்திரத்தில் பிராம் மணன் பணிவுடன் நாலரை மாதம் வேதமோத வேண்டும் என்றும் பகரப்பட்டுள்ளன. இவ்விதம், வ்ரதம், நியமங்களைப் பற்றிய உபதேசங்களால் கடமைகள் விதிக்கப்படுகின்றன. இவ்விதம் நற்குலத்தில் பிறந்து நன்னடத்தையில் நிலை நிற்கும் வேதமறிந்த ஆசாரியனிடம் சேர்ந்து விரதம், நியமம் அனைத் தும் அனுசரிப்பவனுக்கு ஆசாரியன் உச்சரித்துப் பின் அதைப் போல் தானும் உச்சரிப்பதன் மூலம் வேதத்தின் பதத் தொகுதி களை மனத்தில் பாடம் செய்வதே அத்யயனம் என்று அறியப் படும்.

(தொடரும்)

திருவாய்மொழியும் த்வயமும்

த்வயத்தில் பூர்வ வாக்யத்தில் ஐந்தாவது பதமான "ப்ரபத்யே" என்னும் சப்தத்தாலே கூறப்படும் விஷயத்தை, நம்மாழ்வார் திருவாய்மொழியில் ஐந்தாம் பத்தாலே விவரித் தருளுகிறார் என்பதனைக் கூறும் பிள்ளை உலகாரியன் ஸாரஸங்க்ரஹத்திலே இவ்விஷயத்திற்கு மேற்கோளாகச் சில பாசுரங்களை தொகுத்தருளிச் செய்துள்ளார். அப்பாசுரங்களின் அர்த்தங்களை சற்று அநுபவிப்போமீண்டு.

(1) தமியேனுக்கருளாய் : (5-7-2) ஈண்டுஓர் விஷயத்தைக் குறிக்கொள்ள வேணும். பிள்ளை உலகாரியன் தொகுத்த பாசுரங்கள் எல்லாம் நோற்ற நோன்பு திருவாய்மொழி தொடக்கமான நான்கு பதிகங்களில் அடங்கியவையாகும். இவருடைய திருத்தம்பியார் அழகிய மணவாளப் பெருமாள்

வேளுக்குடி K. வரதாசாரியர்

நாயனார் தம்முடைய ஆசார்ய ஹ்ருதயத்தில் "திருவாய்மொழி அர்த்த பஞ்சகப்ரதி பாதகம்" என்று கூறுமிடத்து "நோற்ற நாலும்" என்று இந்நான்கு பதிகங்களும் உபாயப்ரதிபாதகங்களாகக் குறிப்பிட்டுள்ளார் — திருத்தமையனாரும் அந்நான்கு பதிகங்களில் அடங்கிய பாசுரங்களையே இங்கே தொகுத்துத் தந்துள்ளார் அவற்றில் "தமியேனுக்கருளாய்" என்று முதலிலே கூறப்பட்டுள்ளது. இதன் பொருளை சற்றேயநுபவிப்போம்.

தமியேனுக்கு—உன்னையொழியத் துணையில்லாத எனக்கு. அருளாய்—க்ருபையைப் பண்ணியருளவேணும் என்பது பதவுரை.

தமியேனுக்கு — என் பக்கல் ஸத்தாதிரேகியாயிருப்ப தொன்றுமில்லையென்னுதல். ஆற்றாமையோடே ஒரு துணையின்றிக்கேயிருக்கிற எனக்கு என்னுதல். அருளாயே ருசிக்குப் பண்ணின க்ருஷியை, விரோதி நிவ்ருத்திக்கும் ப்ராப்திக்கும் பண்ணுமித்தனை என்கிறார் என்று பெரியவாச்சான்பிள்ளையருளிச் செய்துள்ளார்.

தமியேனுக்கு—உன்னையொழியத் துணையில்லாத எனக்கு. ஸ்வரூபத்தை 'ஸாதநம்' என்று சிலவெழுதிக் கழிக்கில் கழிக்குமத்தனை. நீ உபாயமானாலும் உபாயப்ரதிபத்தி பண்ணுவார் வேண்டாவோ ?

தமியேன்— பிராட்டியில் வ்யாவ்ருத்தி. அங்கானால் ஓர் த்ரிஜடையாகி லுமுண்டிறே. இங்கு 'ஆவாரார் துணை' என்னும்படியிறே தனி. தமியேன்—இத்தனையும் குறைவற்றதென்கிறார். அங்கே பிரியாதிருக்கிறார் படியல்லேன். இங்கே பிரியாதிருக்கிறார் படியல்லேன். இங்குள்ளார்க்கு இவ் விஷயத்தையறியாமையாலே பிரிவில்லையே.

அருளாயே—என் வெறுமையும் உன் பௌஷ்கல்யமும் அறிகைக்கு நீ அடியிற் தந்தவருள் இன்று குடி போயிற்றோ. அன்று நான் அபேக்ஷியாதிருக்க அருளின நீ அபேக்ஷிக்கைக்கு யோக்யதையைப் பிறப்பித்து பொகடவோ. ருச்யுத்பாதநம் பண்ணுவாரொருவரும் உபாயாநுஷ்டாநம் பண்ணுவார் ஒருவருமாயோ யிருப்பது. நின்னருளே புரிந்திருக்கிற எனக்கு அருளாயாகில் பின்னை யார்க்குவேறு அருள யிருக்கிறாய் என்று ஈட்டுதிவ்ய ஸூக்தியமைந்துள்ளது.

அடியேனுடைய ப்ரதிபந்தகத்தையும் நீயே நிர்ஹேதுகமாகப் போக்கி தமியேனுக்கருளாய் என்கிறார் என்று பிள்ளான் அருளிச் செய்துள்ளார்- பிள்ளான தெள்ளாரும் ஞானத் திருக்குருகைப் பிரான் பிள்ளானிறே. தமியேன் என்ற பதத்திற்கு பிரிந்திருக்கிற எனக்கு என்றும் உபாய

சூன்யனான எனக்கு என்றும் ஸம்ஸாரிகள் துணையில்லாத எனக்கு என்றும் மூன்றர்த்தம் அருளிச் செய்யப்பட்டுள்ளது.

ஆழ்வார் பரமபக்தராயிருக்க உபாயசூந்யன் என்று சொல்லக் கூடுமோ என்னில் என் பக்கல் ஸத்தாதிரேகியா யிருப்பதொன்றில்லை என்று ஆழ்வார் திருவுள்ளம் என்றருளிச் செய்துள்ளார்கள் நம்பூர்வர்கள்.

உறங்குகிறவனுக்கு விடிந்தாற்போலே விஷயாந்தரங்களை யொழிய வேறொன்றறியாதே திரியச் செய்தே உன்னுடைய வைலக்ஷண்யத்தைக்காட்டக் கண்டேனித்தனை போக்கி ஸாதநாந்தரங்களை எங்கே கண்டேன் என்கை. ஆற்றாமையை ஸாதநம் என்று பழியிட்டு விடப்பார்க்கில் நித்யசூரிகளை முற்பட விட்டுப் பின்னையன்றோ என்னை விடுவது என்றபடி. அவன் உபாயமானாலும் உபாயப்ரதிபத்தி பண்ணுவார் வேண்டாவோ என்ற உபாய ஸ்வீகாரம் உபாயமன்று. அதிகாரி விசேஷணம் என்னப்பட்டது. "நீயே நிர்ஹேதுகமாக" என்று பிள்ளான் இவ்வர்த்தத்தை வலியுறுத்தியருளிச் செய்தார். ஆக இவனுடைய ப்ரார்த்தநாகர்ப விஸ்ரம்பம் உபாயமன்று. அதிகாரி விசேஷணம், ஸத்தாநதிரேகி என்றதாயிற்று.

நின்னருளே புரிந்திருக்கிற எனக்கு என்ற திவ்ய ஸூக்திக்கு மூலம் "நின்னருளே புரிந்திருந்தேன்" என்ற பெரியாழ்வார் திருவாக்காகும். என்னுடைய நிர்ஹேதுக க்ருபையை நிரபேக்ஷோபாயமாக அபேக்ஷித்து நிர்பரனாயிருந்தேன் என்றும்

நின்னருளே—இவரடியாகிலிறே புதைத்து வார்ப்பது. அவனடியாகவரில் "விதிவாய்க்கின்று காப்பாரார்" என்னும் படியிறே பெருகுவது என்றும் நம்பூர்வர்கள் வ்யாக்யாநித்துள்ளார்கள்.

(2) "ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" (5-7-10) ஆறென்று உபாயம். சரணென்று உபேயம்.

உபாயோபேயங்கள் இரண்டும் உன் திருவடிகளேயாம்படி பண்ணிஞய்" என்று பிள்ளான் நிர்வஹிக்கும். இவையிரண் டிலும் உபாயத்தையே சொல்லுகிறது என்று பட்டர் நிர்வ ஹிப்பர். நோற்ற நோன்பிலேன் என்று தொடங்கி உபா யாந்தர சூந்யதையை முன்னிட்டுக் கொண்டு உபாய நிஷ்கர் ஷம் பண்ணுகிற திருவாய்மொழியாகையாலே அத்தையே நிகமிக்கிறது. அவதாரணத்தாலே ஏகபதத்தை நினைக்கிறது என்று நம்பூர்வர் வ்யாக்யாநம்: ஏகபதத்தை நினைக்கிறது— ஸ்வீகாரத்தில் உபாய பாவத்தைக் கழிக்கிற ஏகபதத்தில் அர்த்தத்தை நினைக்கிறது. தான் ஸ்வீகரித்த ஸ்வீகாரமும் உபாயமன்று என்றபோதே உபாயாந்தர ஸங்கத்யாஜ்யத்வம் கிம்புநர் ந்யாய ஸித்தமிறே என்ற அரும்பத விளக்கத்தையும் காண வேணும். "ஏகம். இந்த ஏகபப்தம் ஸ்தாநப்ரமா ணத்தாலே அவதாரணர்த்தத்தைக் காட்டுகிறது. மாமே வயேப்ரபத்யந்தே. தமேவ சாத்யம். த்வமேவ உபாய பூதோமேபவ. ஆறெனக்கு நின்பாதமே சரணுகத் தந்தொழிந் தாய் என்றும் சொல்லுகிறபடியே. இத்தால் 'வ்ரஜ' என்கிற ஸ்வீகாரத்தில் உபாய பாவத்தைத் தவிர்க்கிறது ஸ்வீகாரந் தானும் அவனுலே வந்தது. ஸ்ருஷ்ட்யவதாராதிமுகத்தாலே பண்ணின க்ருஷிபலம். அதுவும் அவனதின்னருளே. இத்தை யொழியவும் தானே கார்யம் செய்யும் என்று நினைக்கக் கட வன். இல்லாதபோது உபாயநைரபேக்ஷ்யம் ஜீவியாது" என்ற முமுக்ஷுப்படி ஸூத்ரங்களும் இங்கேயநு ஸந்தேயங்கள். பட்டர் நிர்வாஹத்துக்கு "எனக்கு ஆறுதருமிடத்தில் நின் பாதமே சரணுகத் தந்தொழிந்தாய்" என்று பபத நிர்வா ஹம். எனக்கு—அகிஞ்சநனுன எனக்கு. ஆறு சரண் இரண் டும் உபாயமாம் என்றபடி. இதுவே ப்ரகரணுநுகுண நிர்வா ஹமாகும். நின்பாதமே என்பதனை சபதமாக்கி நிர்வஹிப்பர் ஆப்பான் திருவழுந்தூர் அறையர். ஆக இப்பாசுரத்தால் ஆழ்வார் பற்றுபபடியாய்த் தன் திருவடிகளைக் காட்டிக் கொடுத்த வானமாமலை யெம்பெருமான் ஔதார்யம் காட்டப் பட்டது. பாதமே சரணுக்கும் ஔதார்யம் வானமாமலையிலே

கொழுந்துவிடும் என்றிறே ஆசார்ய ஹ்ருதய திவ்யஸூக்தி.

(3) உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன். (5-8-3) நானும் எனக்குக் கடவனாய், பிறரும் சக்தரானவன்றும், உன்னால் வரும் நீயொழிய என்னால் வரும் நீயும் வேண்டா. பிறரால்வரும் நீயும் வேண்டா என்கை. த்வமேவ உபாயபூதோமேபவ. என்றருளிச் செய்துள்ளார் பெரியவாச்சான்பிள்ளை.

(4) கழல்களவையே சரணாகக் கொண்ட : (5-8-11)— "விரோதி நிரஸந சீலனுடைய திருவடிகளே இஷ்ட ஸித்திக்கு உபாயம் என்று அத்யவஸித்த ஆழ்வார். விரோதியைப் போக்குவானும் தன்னைத் தருவானும் அவனே யென்கை. அவதாரணத்தாலே ஸஹகாரி நைரபேக்ஷ்யம் சொல்லுகிறது. த்வமேவ உபாய பூதோமே. மாமேகம்" என்று பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநமிட்டருளினார்.

(5) "அடிமேல் சேமங்கொள்" (5-9-11) அவனைப்பெறாதே நோவுபட நோவுபட அவன் திருவடிகளே ரக்ஷகமாகப் பற்றும் ஆழ்வார். பிராட்டி ஆற்றாமைமிக்க விடத்திலும் ராவணனை சபியாதே பெருமாள் வரவைப் பார்த்திருந்தாப் போலே என்று இருபத்து நாலாயிரம்.

(6) ",நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு என்று நாடொறும் ஏக சிந்தையனாய்" (5 10-11) ஸாம்ஸாரி ஸ்வபாவங்கள் மேலிட்டு விபரீதமே பலியா நின்றாலும் இதொழிய வேறொன்றில் கால் தாழாதொழிகை-மஹாவிச்வாஸமாகிறது என்றருளிச் செய்கிறார் பெரியவாச்சான்பிள்ளை. ஆக ஐந்தாம்பத்தால் அவனே உபாயம் என்ற மஹாவிஸ்வாஸம் கூறப்பட்டது. ஆக பூர்வ வாக்யார்த்தம் அருளிச் செய்யப் பட்டது.

(தொடரும்)

ஓர் ஆராய்ச்சி

ஸ்ரீதாசார்யன் ஆடி மீ இதழில் "ஆழ்வானும் பிள்ளைகளும் என்னும் கட்டுரை ஆழ்வானின் பெருமையை விளக்குவதாக வுள்ளது கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

ஆனால் "எண் பெருக்கந் நலத்து" பாசுரத்தின் ஈட்டு அவதாரிகையில் உள்ள ஐதிஹ்யத்தைப் பற்றி இக்கட்டுரை யில் ஆராய்ந்திருக்கும் வகை சரியா என ஐயம் எழுகின்றது.

இப்பாட்டின் ஈடு அவதாரிகை பின் வருமாறு :

"ஆழ்வான், இப்பாட்டளவும் வரப்பணித்து, இப்பாட்டளவிலே வந்தவாறே "இத்தை உங்கள் ஆசார்யர்கள் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கோள்" என்ன, பட்டரும் சிராமப்பிள்ளையும் எழுந்திருந்து போகப் புக்கவாறே, அவர் களை அழைத்து, 'இன்னபோது இன்னார் இருப்பார், இன்னார் போவார் என்று தெரியாது. இருந்து கேளுங்கோள் என்று திருமந்திரத்தை உபதேசித்து, இப்பாட்டை நிர்வஹித்து இப்பாட்டை இதுக்கு அர்த்தமாக நினைத்திருங்கோள்" என்று பணித்தான்."

இங்கு அடையவளைந்தான் அரும்பதவுரை :

"அஸ்யார்த்தஸ்ய ஆசார்யோபதேசைக வேத்யத்வம், முமுக்ஷுணுமவச்யா பேக்ஷிதத்வஞ்ச ப்ரகாசயன் ஐதிஹ்ய முகேந உக்தார்த்தேஸம்மதி மாஹ (ஆழ்வான் இதி) அத்ர யாமுநமுநி ஸந்நிதௌ ஸகலஸம்ப்ரதாய ச்ரவணார்த்தம் பாஷ்யகாரா சமந வேலாயாம் யாமுநமுநே : பரமபத சலேநவா | பத்ரேக்ஷி தோவாவ்யர்த்தஸ்யாத் ப்ரத்யுத அநர்க்ஷதோ பவேத் || இதி சலோகஞ்ச த்ரஷ்டவ்யெள ஆழ்வானுடைய முந்தின வார்த்தைக்கு—கௌரவ்யதையிலே நோக்கு. பிந்தின வார்த்தைக்கு—போக்யதையிலே நோக்கு" —(பகவத் விஷயம். ஸுதர்சனம் ஆசிரியர் பதிப்பு-பக்கம். 434—435).

இதில் முந்தின வார்த்தை "இத்தை உந்தம் ஆசார்யர்கள் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கோள்" என்பது. "திருமந்த் ரார்த்தம் சொல்லும் பாசுரமாகையாலே ஆசார்யனே உபதேசிக்க வேணும்: எம்பாரிடம் சென்று கேளுங்கோள்" என்று திருமந்தரத்திடம் கொண்ட கௌரவம் தோற்ற

அருளிச்செய்தார். குமாரர்கள் புறப்பட எழுந்திருந்த போது "மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்" என்ற பாசுரம் ஆழ்வானுக்குத் திருவுள்ளத்திலேஓட, தேனும், பாலும், கன்னலும், அமுதுமாகிய திருமந்த்ரத்தின் போக்யதையை இப்பிள்ளைகள் அநுபவிக்கவேணும், இழந்துவிடக் கூடாது. இவர்கள் ஆசாரயன் திருமாளிகை சென்று சேரும்வரை இவர்கட்கு என்னுகுமோ? என்று பயந்து 'இன்னபோது இன்னார்...'' என்று சொல்லி பாட்டின் பொருளை அருளிச் செய்தார் இது பிந்தின வார்த்தை. இனி கட்டுரையில், "தெரியாது, இருந்து கேளுங்கோள்'' என் கொள்ளாமல் "தெரியாதிருந்து' என்று கொண்டு போவார் வருவார் அறியாமலிருந்து' வேறொன்றும் அறியாமலிருந்து கேளுங் கோள் என்று பொருள் கொண்டிருப்பது உசிதமா என்று ஆராய்தல் நன்று.

அரும்பதவுரையில் "ஸ்ரீராமாநுஜர் ஆளவந்தாரிடம் ஸம்ப்ரதாயார்த்தங்கள் கேட்கஓடிவர, பின்னவரின் பரம பதித்தலை உதாரணம் காட்டியிருப்பதும் உற்று நோக்கத் தக்கது

மேலும், பட்டரின் பெருமை பேசுமிடத்தில், ஒருநாள் பள்ளியில் ஓதி, மறுநாள் ஓதப் போகாமல் விளையாடி இருக்க "ஏன் பள்ளிக்குச் செல்லவில்லை'' என்று கேட்டதற்கு 'ஓதின இடமே ஓதுகிறார்கள்'' என்ன, ஆயின் 'நேற்றுச் சந்தையைச் சொல்' என்ன அப்படியே அவரும் சொன்னார் என்று குருபரம் பராப்ரபாவம் கூறுகிறது இப்படிப்பட்டவரைத் தமப்பனார் 'யார் வருவதும் போவதும் தெரியாமலிருந்து' கேளும் என்று வற்புறுத்திச் சொல்ல வேண்டியதுண்டோ?

ஆக "இன்னபோது... நினைத்திருங்கோள்'' என்பதற்கு யாருக்கு எப்போது ப்ராணபத்து விளையும் என்பது சொல்ல முடியாதாகையாலே பரமபோக்யமான திருமந்த்ரார்த்தத்தை பிள்ளைகள் இழந்துவிடக் கூடாது என நினைத்து, இப்போக்யதையால தூண்டப்பட்டு ஆசார்யனே உபதேசிக்க வேண்டிய திருமந்த்ரார்த்தத்தைத் தாமே பிள்ளைகளுக்கு உபதேசித்தார் என்று கொள்வதுதான் பொருத்த முடையதாகத் தெரிகிறது

இளையவில்லி பூவாராஹாசாரியர்,
பெங்களூர்.

ஆசிரியர் பக்கம்

ஆலவாயன் : என்ன ஆசிரியரே ! உம்மை நான் வம்புக்கிழுப்பதாக ஒருவர் எழுதியிருக்கிறாரே ! எனக்கு உம்மிடம் கேள்வி கேட்கவே பயமாக இருக்கிறதே,

ஆசிரியர் : அல்ல ஆலவாயா ! உன்பேரில் உள்ள உரிமையோடுதான் அவர்கள் அப்படி எழுதியிருக்கிறார்களே தவிர உண்மையிலேயே அவர்கள் உன்னை விரும்புகிறார்கள்

ஆலவாயன் : அது எப்படி அவ்வளவு நிச்சயமாகக் கூறுகிறீர் ?

ஆசிரியர் : நீதானே சென்ற முறை 'ஆசிரியர் பக்கத்தைக் காணோம் என்று வாசகர்கள் மடிபிடித்துக் கேட்கிறார்கள்' என்று கூறினாய். இதிலிருந்தே அவர்கள் உன்னை விரும்புகிறார்கள் என்று தெரியவில்லையா ?

ஆலவாயன் : ஆமாம் ஆமாம் நானும் மறந்தே விட்டேன். என் வார்த்தையைக் கொண்டே என்னை மடக்கிவிட்டீரே ! அதுசரி. இந்த மாதம் (ஆவணி) ரோகிணி நக்ஷத்திரத்தில் பெரியவாச்சான் பிள்ளை அவதரித்திருக்கிறார் அல்லவா ? அவருடைய பெருமைகளைப் பற்றிச் சிறிது கூறுமே ! கேட்கிறேன்.

ஆசிரியர் : ஏதேது ஆலவாயா ! நீயும் வைணவத்தில் வல்லவனாகி விட்டாயே ! பெரியவாச்சான் பிள்ளையைப் பற்றி நீ அறிந்தவற்றைக் கூறு.

ஆலவாயன் : பெரியவாச்சான் பிள்ளை இன்றைக்கு ஏறக்குறைய 700 வருஷங்களுக்கு முன் வாழ்ந்தவர். இவர் வியாக்யான சக்கரவர்த்தி என்று போற்றப்படுகிறார். நாலாயிர திவ்ய பிரபந்தத்திற்கும் இவர் அருளிச் செய்துள்ள வியாக்யானங்கள் தேனும், பாலும், கன்னலும் அமுதும் போல இனிமையானவை என்றும் கேள்விப் பட்டிருக்கிறேன். அவற்றில் ஏதாவது ஒன்றைப்பற்றி கூறும் கேட்கிறேன்.

ஆசிரியர் : அப்படியே செய்வோம். குலசேகர ஆழ்வார் வித்துவக்கோடு என்னும் ஊரிலுள்ள பெருமானைப் பாடும்போது **"மீன் நோக்கும் நீள் வயல் சூழ் வித்துவக் கோட்டம்மா"** என்று அருளிச் செய்திருக்கிறார். இதற்கு உனக்குத் தோன்றும் அர்த்தத்தைககூறு பார்க்கலாம்!

ஆலவாயன் : "மீன்கள் பார்க்கும் பார்க்கும்படியான வயல்கள் சூழ்ந்த வித்துவக்கோடு" என்று பொருள் வருகிறது. ஆனால் மீன்கள் எதற்காக வயல்களை நோக்கவேணும்? அதுதான் புரியவில்லை. இதற்கு வியாக்யான சக்ரவர்த்தி அருளிச் செய்யும் விளக்கமென்ன?

ஆசிரியர் : ஒரு ஊருக்குச் சிறப்பு அதன் நீர்வளமே. அதாவது அவ்வூரின் வயல்களில் எப்போதும் நீர் நிரப்பியிருக்க வேண்டும். வித்துவக்கோடு வயல்களில் நீர் மிக அதிகமாக இருந்ததாம். கடலிலுள்ள மீன்கள் இதைக் கண்டு மிகவும் மகிழ்ந்ததாம். அதாவது தாம் வசிக்கும் கடலிலுள்ள நீர் வற்றிவிட்டாலும் வசிப்பதற்கு இடமில்லையென்று கவலைப்பட வேண்டாம், வித்துவக்கோடு வயல்கள் இருக்கவே இருக்கின்றன என்று (அதாவது கடலிலுள்ள நீர் வற்றினாலும் வித்துவக்கோடு வயல்களிலுள்ள நீர் வற்றவே வற்றாது என்றபடி) எனவே "மீன் நோக்கும நீள் வயல் சூழ் வித்துவக்கோடு" என்கிறார் ஆழ்வார். இதுதான் பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்யும் வியாக்யானம், எப்படியிருக்கிறது.

ஆலவாயன் : ஆகா! மிகவும் அற்புதமாக இருக்கிறது. இவ்வளவு அழகாக வியாக்யானம் செய்ய அவா ஒருவரால்தான் முடியும். எனவே 'வியாக்யான சக்ரவர்த்தி' என்ற பட்டம் பெரியவாச்சான் பிள்ளை ஒருவருக்கே பொருந்தும்.

திருநீர்மலை

மாமலையாவது நீர்மலையே! : திருநீர்மலை என்பது ஒரு மலை. பாரத நாட்டில் பல பெரிய மலைகள் இருக்கின்றன. அவற்றோடு இம்மலையை ஒப்பிடும்போது திருநீர்மலை மிகச் சிறிய மலையே! திருமங்கையாழ்வார் 'நீர்மலை மாமலையே!' என்று அறுதியிட்டுத் தெளிவாகக் கூறிவிட்டார். ஆம்! மாமலை என்பதற்கு உயர்ந்த மலை என்று பொருள் கொள்ளாமல் மிகவும் சிலாக்யமான (அனைவரும் போற்றும் புகழ்மிக்க) மலை என்றே கொள்ள வேண்டும். பகவானிடம் நிலையாக இருப்பது மேன்மை! அவன் மேலானவன்;

ஸ்தலசயனத்துறைவார்

மேன்மையன் என்று மறைகள் கூறுகின்றன; ஞானியரும் முனிவரும் இயம்புகின்றனர். ஆனால் 'நீர்மையே தனக்கு இயற்கை' என்பதைக் காண்பிப்பதற்காகவே பல அவதாரங்களை மேற்கொண்டு பெரியோர்களும் அன்பர்களும் சொல்லிய படியெல்லாம் நடந்து கொண்டான். அர்ச்சாவதாரத்தில் மிகவும் எளியனாக இருந்து கொண்டு எல்லையிலா நீர்மையை வெளிப்படுத்துகிறான்.

மிகவும் உயர்ந்து இருத்தல் மலைக்கு மேன்மை! திருநீர்மலையோ, சிறுவர்களும் தன்மீது ஏறிவந்து பகவானை ஸேவிக்க உதவும் வகையில் சிறிதே உயர்ந்து நிற்கிறது மலையும் தன் எளிமையைக் காட்டி நிற்கிறதே! இம்மலையில் எழுந்தருளியுள்ள எம்பெருமான், எல்லோரும்வந்து தன்னை வணங்கும்படி நீர்மை விளங்க நிற்கிறான் அவனைத் தாங்கி நிற்பதால் (அவனுடைய தொடர்பால்) மலையும் நீர்மை பெற்று நீர்மலையாயிற்றே! பிறருக்கு வணங்கி நடப்பவனே உலகில்

சிறந்தவனாக விளங்க முடியும் என்று பலர் கூறுவார்கள். மலையும் தன் நீர்மையைக் காட்டிக் கொண்டு மாமலையாயிற்று. ஆழ்வாரின் வாக்கு அருள்வாக்கு ! நீர்மலை மாமலையே !

நாலுகவிப் பெருமாளும், நாலுகதிப் பெருமாளும் : பகவானுக்குச் சதுர்கதி: என்று ஒரு திருநாமம். சிங்கம், புலி, யானை, காளைகளின் நடையழகைக் கொண்டவன் என்று பொருள். பலவகையாக நடந்து நடையழகைக் காட்டுவதில் சதுரன்-ஸமர்த்தன் என்றும் கூறலாம். 'நிலை' என்ற பொருளை கதி : என்ற சொல்லால் சிலர் குறிப்பிடுகின்றனர். அப்படியாகில் நின்ற நிலை, அமர்ந்த நிலை, கிடந்த நிலை, நடந்த நிலை என்ற நான்கு நிலைகளையும் கொண்டவன் எம்பெருமான் என்று உணரலாம். பகவான் சில இடங்களில் நின்றான்; சில இடங்களில் அமர்ந்தான். சில இடங்களில் பள்ளி கொண்டான். மக்களின் நன்மைக்காக நடந்தான். விபவாவதாரங்களில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அவற்றை எல்லோரும் கண்டதில்லை. அர்ச்சாவதாரத்தில் அந்த எம்பெருமானே திருநறையூரில் நிற்கிறான்; திருவாலியில் அமர்ந்தும், திருக்குடந்தையில் பள்ளிகொண்டும் காட்சியளிக்கிறான். உலகைத் தன் திருவடிகளால் அளக்க நடந்த கோலத்தில் திருக்கோவலூரில் ஸேவை ஸாதிக்கிறான். அனைவரும் அவ்விடங்களுக்குச் சென்றும் வணங்கினார்களில்லை.

திருமங்கையாழ்வாருக்கு நாலுகவிப் பெருமாள் என்று ஒரு பெயர். வெகுவிரைவாகப் பல பாசுரங்களை அருளிச் செய்வார். ஓவிய வடிவில் அமையும்படியான பாசுரங்களையும் அனைவரும் வியக்கத்தக்க முறையில் அருளுவார். தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்திக்கும் வகையில் சுவை நிரம்பிய பாசுரங்களைத் திருவாய் மலர்ந்து அருளுவார். பல சீர்களைக் கொண்ட பெரிய விருத்தங்களிலும் பாடல்களைப் பாடுவார். ஆசு கவி, சித்ர கவி, மதுரகவி, விஸ்தார கவி

ஆகிய நாலுகவிப் பெருமாளின் (இவ்வாழ்வாரின்) பாடல்களில் இவ்வழகுகளைக் காணலாம்.

திருமங்கையாழ்வார் திருநீர் மலைக்குச் சென்றதும் எம்பெருமான் நான்கு நிலைகளிலும் அவரெதிரில் வந்து தோன்றினான். மக்களால் திருநறையூருக்குச் செல்ல முடிய வில்லை; திருவாலி, திருக்குடந்தையும் அப்படியே. திருக் கோவலூருக்கும் செல்ல முடியவில்லையே! அந்தோ இப்படிப் பட்ட பாக்கியத்தை மக்கள் இழக்க வேண்டியதுதானா? என்று நினைத்தார். வேண்டாம். வேண்டாம்... திருநீர் மலைக்கு வந்து ஸேவித்தாலே போதும் என்ற திருவுள்ளத் துடன் 'நின்றானிருந்தான் கிடந்தான் நடந்தாற் கிடம் மாமலையாவது நீர்மலையே!' என்று கூறினார். ஆதலால் நாலு கவிப் பெருமாள் காட்டிய நாலு கதிப் பெருமாளே திருநீர் மலை யெம்பெருமான்!

காக்கும் பரமன் கண்ணபிரான்: வாணன் என்பவன் அசுரன். அவன் உடல் வலிமையோடு வரவலிமையும் பெற்ற வன். சிவபக்தன். அவனுக்கு ஆயிரம் கைகள். அவன் கண்ணனோடு சண்டையிட்டான். பெரும் போர் நடந்தது. அவனுக்கு உதவ வந்தவர்கள் எல்லோரும் ஓட்டம் பிடித் தனர். கண்ணன் சக்கரப் படையினால் வாணனின் கைகளை வெட்டி வீழ்த்தினான். வாணனின் நான்கு கைகளை மட்டும் விட்டு விட்டான் வாணனுக்கு உயிர்ப்பிச்சையளித்தான். நான்கு மறைகளும் பகவானைக் காட்டுவது போல் வாணனும் தன்னுடைய நான்கு கைகளாலும் 'இவனே உலகைக் காப்பவன்' என்று திருநீர்மலை யெம்பெருமானை சுட்டிக் காண்பித்து நின்றான். அப்படிப்பட்டவன் நீர்மலையான். நீரினை அரணாகக் கொண்ட மலை! நமக்கு அரணும் அவனே! அரணும் நமக்கு என்றும் ஆழிவலவன்.

இரங்கும் உயிரனைத்தும் இன்னருளால் காப்பான்
அரங்கன் ஒருவனுமேயாதல் கரங்களாற்
போர் மலைவான் வந்த புகழ்வாணன் காட்டினான்
நீர்மலைவாழ் எந்தை யெதிர் நின்று.

நூற்றெட்டு திருப்பதி அந்தாதி (91)

ஆவணி மாத ராசி பலன்

குண்டலம் R. திருமலாசாரியர்

மேஷம் : (அசுவதி, பரணீ, கார்த்திகை 1 பாதம்) இம் மாதம் முற்பாதியில் 6 க்ரஹங்களும் ஒன்றாக இருப்பதால் பலன்கள் நல்லதும் மற்றதும் கலந்து தான் இருக்கும். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். திங்கள் செவ்வாய்களில் சமூக வேலைகளில் தொண்டாற்றுவதன் மூலம் மன அமைதி பெறுவீர். எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது சிரமம். நெருங்கிய ஸ்நேஹிதர்கள் மூலமும் உங்கள் கார்யங்கள் தாமத மாகும். தொடர்ந்து இராமபிரானை வணங்கி வரவும்.

வ்ருஷபம் : (கார்த்திகை 2–4 பாதம், ரோஹிணீ, மிருக சீர்ஷம் 1–2 பாதம்) வாழ்க்கையில் சுபிட்சம் ஆரம்பமாகும். காரியாலயங்களில் ஒரு புதிய திருப்பம் உண்டாவதன் மூலம் நன்மை ஏற்படும். ஆனால் மிகுந்த அலைச்சலுடன் ஓய்வின்றி உழைக்க நேரும். புதிய கார்யங்கள் சற்று தாமதமாகவே பூர்த்தியாகும். லாட்டரி பந்தயங்களில் சிறு லாபம் கிடைக் கும். கணவன் மனைவி உறவு சீரடையும். உடல் நலம் நன் ருக இருக்கும். செலவினங்கள் குறைந்து லாபம் இருக்கும் செவ்வாய்க் கிழமைகளில் பணவிரயம் ஏற்படுமாதலால் கவன மாய் இருக்கவும்.

மிதுனம் : (மிருக சீர்ஷம் 3–4 பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1–3 பாதம்) முன் பாதி மாதம் பிறரால் துன்பமும் வீண் செலவும் ஏற்படும். சனிக்கிழமைகளில் மட்டும் செலவு ஏற்படாததுடன், பாக்கிகள் வசூலாகும். உடல் நலக் குறைவை அவ்வப் பொழுது மருத்துவர் உதவியுடன் கவனிக் காவிடில், வியாதி முற்றலாம். முக்கிய வேலைகளை திங்கட் கிழமைகளில் செய்து வெற்றி காணவும். வேலை பளு அதி கரிக்கும் மிகவும் நிதானமாயும் பொறுமையாயும் இருந்தால் தான் மன அமைதி கிடைக்கும். வியாழன் தோறும் ஸ்ரீ ஆஞ்ச நேயரை வழிபடுவது நன்மை பயக்கும்.

கடகம் : (புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம்) சுற்றியுள்ளவர்களின் தாராள உதவியால் நல்ல பயனடைவீர். தேவையான ஜங்கமப் பொருள்களை வாங்குவதற்கு மிகவும் ஏற்ற காலம். வேலை மாற்றலுக்கோ, புதிய துறையில் வேலைக்கோ மனுசெய்து முயற்சிக்க மிகவும் நல்ல தருணம். அனாவசிய செலவினங்கள் குறையும். குடும்பத்தில் ஸந்தோஷம் நிலவும். சிறு புண்யதல யாத்திரை நேரும். புத்திசாதுர்யமுள்ளவர் என மேலதிகாரிகளால் புகழப்படுவீர். சனிப்ரீதியாக ஸ்ரீ ந்ருஸிம்ஹனை வழிபடுவது மிக்க புகழ் தரும்.

ஸிம்ஹம் : (மகம், பூரம், உத்தரம், 1 பாதம்) கூடியவரை அத்யாவச்ய தினசரி வேலைகள் தவிர மற்றவைகளை தள்ளிப் போடுவது நன்மை. நல்ல முன்யோசனையுடன் செயல்படா விட்டால் வீண் விரயங்களைத் தவிர்க்க முடியாது. சிறிய ஸம்பவங்களும் மன அமைதியைக் குலைக்கும். பணமுடையால் ஸொந்தத் தேவைகளையும் குறைத்துக் கொள்ளும்படியான நிர்பந்த சூழ்நிலை ஏற்படும். பிறரிடம் எதிர்பார்த்த உதவிகள் தடைபடுவதுடன் சிக்கலான சூழ்நிலையால் ஏமாற்றமும் ஏற்படும். பிறர் பேச்சை நம்பவேண்டாம். ஸ்ரீ துர்கா லக்ஷ்மியை துதி செய்து சற்று மன அமைதி பெறுவீர்.

கன்னி : (உத்தரம் 2–4, ஹஸ்தம், சித்திரை 1–2 பாதம்) இதுவரை நேசக்கரம் நீட்டியவரும் இடையூறு செய்ய முயலுவர். உடனே நடக்கும்போல் தோன்றிய கார்யங்கள் கூட லேசில் நடைபெறுது வீண் சர்ச்சைகளால் மனஸ்தாபங்கள் ஏற்படும். எதிர்பாராத விருந்தினரால் சாப்பாட்டுச் செலவு அதிகமாகும். உடல் நலனை உடனுக்குடன் பேணவும். பித்தரோகத்தால் அவதி ஏற்படலாம் அனாவசிய அலைச்சலும் தனவிரயமும் அதிகரிக்கும். அனுதினமும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் செய்து வந்தால் ஓரளவுக்கு த்ருப்தியாக வாழலாம்.

துலாம் : (சித்திரை 3-4, ஸ்வாதி, விசாகம் 1-3) சென்ற மாதம போல் பணலாபங்கள் தொடர்ந்து கிடைக்கும். குடும்ப வியவஹாரங்களை ஸுமுகமாக முடித்துக் கொள்ளலாம். பொதுவாக திங்கள் செவ்வாய்க் கிழமைகள் அதிர்ஷ்டமானவை. வயதான உறவினர்களும், ஸஹதொழிலாளிகளும் ஸந்தோஷமாக உதவி செய்து மகிழ்விப்பர். சிறு பயணங்களால் தொழில் அபிவிருத்தியுடன் உல்லாஸமாயும் பொழுது போக்க நேரும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். லாட்டரியில் சிறு லாபமுண்டு.

வ்ருச்சிகம் : (விசாகம் 4, அனுஷம், கேட்டை), தொழில் நிலை சற்று மந்தமடைவதுடன் இட மாற்றமோ ஊர் மாறுதலோ ஏற்பட ஹேது உண்டு. வருமானம் பத்தில் ஒரு பாகம் குறையும். ஆதாரமில்லாமல் பயந்து கொண்டு நீங்களாகவே துன்பப்படுவீர். உபயோகமான வழிகளில் மூளையைச் செலுத்தி உறுதியுடன் செயல்பட்டால்தான் இருக்கும் தொழிலை நிலைத்துக் கொள்ள முடியும். உடல் நலத்தை பேணுவதவசியம். அவசியமான கார்யங்களை திங்கட் கிழமைகளில் செய்யவும். லாட்டரியை தவிர்க்கவும்.

தனஸு : (மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்) மனநிறைவுடன் வாழலாம். புதிய கார்யங்கள் தொடங்க ஏற்ற மாதம். திங்கட் கிழமைகளில் உடன் பிறந்தவர்களால் மகிழ்ச்சிகரமான கார்யங்களில் ஈடுபடுவீர். பிறருக்கு உதவி செய்வதன் மூலம் மகிழ்ச்சி அடைவீர். அரசியல ஈடுபாடு நல்ல பலன் தரும். அயல் நாட்டினருடைய ஒத்துழைப்பால் உத்ஸாஹமான முன்னேற்றம் காண்பதுடன் நல்ல திரவிய லாபமும கிடைக்கும். இது முதல், வருடம் முடிய நல்ல வெற்றியுடன் முன்னேறுவீர். லாட்டரியில் சிறு லாபமுண்டு. நிறைய சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொளவீர். பொதுவாக நல்ல மாதம்.

மகரம் : உத்தராடம் 2-4, திருவோணம், அவிட்டம் 1-2 பாதம்) சேமிப்பு, ஆயுள் காப்பு, முதலீடு, கொடுக்கல் வாங்கல்

முதலியவைகளில் புது ஈடுபாடு வேண்டாம். முக்யமான பண பேரங்களை 3 மாதங்களுக்கு தள்ளிப்போடவும். புதன் கிழமைகளில் அவசியமானதும் அவஸரமானதுமான கார்யங்களைக் கவனிப்பது நன்மையாக முடியும். ஸஹ தொழிலாளர்களும் உறவினர்களும் ஒத்துழைப்பு தரமாட்டார்கள். கவனக் குறைவுடன் நடந்தால் பெருத்த ஏமாற்றமடைவீர். குடும்பத்தில் ஒருவருடைய உடல்நிலை சற்று மோசமடைந்து கவலை தருவதாய் இருக்கும் ஆயினும் மாதக் கடைசியில் தேறுவர். ஸ்ரீஸுந்தர காண்ட பாராயணம் செய்வது மிகவும் நல்லது.

கும்பம் : (அவிட்டம் 3-4, சதயம், பூரட்டாதி 1-3 பாதம்) நல்லகாலம் ஆரம்பமாகிறது. எதிர்பாராத உதவிகள் கிடைப்பதுடன் நல்ல ஸுமுகமாகப் பழகி எல்லாருடைய நன்மதிப்பும் பெறமுடியும் வீட்டிலும், கார்யாலயத்திலும் அமைதியும், திருப்தியும், ஸந்தோஷமும் நிலவும். பழைய பாக்கிகள் வஸுலாகும் கல்வித்துறையில் உள்ளவர்களின் புகழ் ஓங்கும். வெளியூர்ப் பயணங்களில் வெற்றியுடன் லாபமும் உண்டு. வியாழக் கிழமைகளில் ஈடுபடும் செயல்கள் முழுதும் பயனளிக்கும். திருமணமாகாதவர்க்கு திருமணமும் ஸந்ததியிலலாதார்க்கு நல்ல ஸந்ததியும் பகவானருளுடன் கிட்டும். போட்டிகளில் வெற்றியும், லாட்டரியில் பரிசும் கிடைக்கும்,

மீனம் : (பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி) உடல் நலம் பாதிப்பதுடன் பலருடைய விரோதமும் ஏற்பட வாய்ப்புள்ளதால் பிறருடன் பழகும் போது மிக ஜாக்ரதையாய் இருக்க வேண்டும். கார்யாலயங்களில் அதிக வேலை பளுவும், இடைஞ்சலும் இருக்கும். மேல் பதவிகள் கிடைப்பதில் திடீரென மந்தநிலை ஏற்படும். கடன் கொடுப்பதை கட்டாயம் தவிர்க்கவும். தவிர்க்க முடியாத கார்யங்களை புதன் சனிக் கிழமைகளில் செய்வதால் அதிக கஷ்ட நஷ்டங்களை தவிர்க்கலாம். பணமாகக் கையில் வைத்திருப்பதை தவிர்த்து 6-8 மாதங்கள் வரை எடுக்க முடியாத சேமிப்பு நிதியில் பணம் வைத்திருப்பது நலம். நம்மாழ்வார் திருவாய்மொழி ஆழியெழ என்ற பதிகம் கற்பது இன்பமும் நன்மையும் பயக்கும்.

"மதுர கவியின் மாண்பு"

அண்ணாவியார் ஸ்ரீநிவாஸன்
ஆழ்வார் திருநகரி.

பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற அவ்வாதிப் பிரானே, ஆதியஞ்சோதி உருவை, அங்கு வைத்து இங்கு பிறந்தான் ஸ்வாமி நம்மாழ்வாராக. அவ்வாழ்வாரும் தன் அவதாரம் தொடங்கி, திருப்புளியின் அடியில், இளைப்பினை இயக்கம் நீக்கி, இருந்து முன்னிமையை கூட்டி, அளப்பில் ஐம்புலன் அடக்கி, இப்படி, நாள் திங்கள், ஆண்டாண்டாய் 16 ஆண்டு கள் மௌனியாக யோகு வீற்றிருந்தார். இந்த நிலையில் செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும் ? என்று வினு விடுத்து, விடை பெற்று, உறங்கிக் கிடந்த அவ்வாழ்வாரின் உள்ளக் கதவை மெள்ளத் தட்டி எழுப்பி. "ஆ முதல்வன்" என்ற, ஆழ்வாரின் திருக்கண் நோக்கிற்கு முதன் முதலில் இலக்காகி நான்கு வேதசாரமான திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி என்ற நான்கு பிரபந்தத்தை நமக்கு வாங்கித் தந்தது ஸ்ரீ மதுரகவிகளே.

பிற்காலத்தில் ஸ்ரீமன் நாதமுனிகள், ஓராயிரம் பெறக் கேட்டு, நாலாயிரம் தரக் காரணமாய் இருந்தது மதுரகவியின் பிரபந்தமான கண்ணினுண் சிறுத்தாம்பு என்பதும் இங்கு நாம் நினைவில் கொள்ள வல்லது நல்லதல்லவா ! இப்படி நான்கு பிரபந்தத்திற்கும் சரி, நாலாயிரப் பிரபந்தத்திற்கும் சரி, மூல காரணம் ஸ்ரீ மதுரகவியும், மதுரகவியின் பிரபந்தமுமே, என்றால் அது மிகையன்று. இந்த மதுரகவிக் கும் அவர் பிரபந்தத்திற்கும் ஏற்றம் கொடுக்கும் வகையில்

உலகுக்கு திலதமான திருவேங்கடமாமலை என்னும் வடமாமலையில் திகழும் நச்சுமாமருந்தான அச்சுதனும் திருவேங்கடவன், தனது அத்யயன உத்ஸவத்தில் மதுரகவியின் கண்ணிநுண் சிறுத்தாம்பு பிரபந்தத்தை தனி உத்ஸவமாக (22-ம் நாள்) கொண்டாடி திருச்செவி சாற்றி திருவுள்ளம் கொள்கிறான். மற்ற ஆழ்வார்களைப் போல் இந்த மதுரகவி நூறு, ஆயிரம் என்று பாடாவிட்டாலும், பதினொரு பாசுரங்களே பாடியிருந்தாலும் அவை, வாய்த்த திருமந்திரத்தின் மத்திமமாம் பதம் போல், சீர்த்த மதுரகவி செய் கலையை, ஆர்த்த புகழ் ஆரியர்கள் தாங்கள், அருளிச் செயல் நடுவே இன்றும் சேவித்து வருகின்றனர். ஆசார்ய சிஷ்ய ச்ரம பர்வ நிஷ்டையை அனுஷ்டித்துக் காட்டியவரும் மதுரகவியே ஆவார்.

நான்மாடக்கூடலாம் மதுரை மாநகரில் கூடியிருந்த சங்கப் புலவர்களின் அவையிலே கண்ணன் கழலிணை என்ற திருவாய்மொழியின் ஒரு பாசுரம் கொண்டு ச்ங்கத்தாரை வெற்றி கண்டு திருவாய்மொழியின் அருமை பெருமைகளை நிலைநாட்டி அவனியறிய பவனி வந்தவரும் மதுரகவியே ஆவார்.

மேலும், நம் போன்ற பின்னுளர் வணங்கி வழிபட வேண்டி நம்மாழ்வாரின் திவ்விய மங்களத் திருவுருவை அர்ச்சையிலே எழுந்தருளப் பண்ணியவரும் ஸ்ரீமதுர கவிகளே. மேலும் மதுரகவியாழ்வார், நம்மாழ்வாரின் திருவுருவத்தை ஒரு பல்லக்கில் எழுந்தருளச் செய்து ஸ்ரீரங்கம் சென்று சேர்ந்தார். அங்கே 10 தினங்கள் நம்பெருமாள் திருமுன்கையில் தாளம் கொண்டு திருமுடியில் பரத்வ சூசகமான மகுடம் அணிந்து திருவாய்மொழியை இசையிலே ஏறிட்டு விண்ணப்பம் செய்தார். திருவரங்கனும்

மனமுகந்து, மதுர கவிகளுக்கு, திருவாய்மொழி விண்ணப்பம் செய்வார் என்ற விருது வழங்கினர். அன்றைய இந்த மதுர கவியே இன்றைய அரையர்களுக்கு முன்னேடியாகத் திகழ்ந் தார். (இச் செய்தி கோயில் ஒழுகில் காணலாம்). "பேரொளி கண்ட பேரறிஞனை" இம் மதுரகவிகளைப் பற்றி மாற்றற்ற செம்பொன் மணவாளமாமுனிகள் "தென்னரங்கர் சீரருளுக்கு இலக்காகப் பெற்ருேம். திருவரங்கம் திருப்பதியை இலக்கா கப் பெற்ருேம். மன்னியசீர் மாறன் கலையே உணவாகப் பெற்ருேம். **மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்ருேம்'**' என்ருர். அப்படியே நாமும் இருக்க முயலுவோமா ?

தேவு மற்றறியேன்—10

க்ருஷ்ணத்ருஷ்ணாதத்வம் என்று போற்றப்படும் நம்மாழ்வார் க்ருஷ்ணப்ரேமையே ஒரு வடிவெடுத்தவர். எம்பெருமானருளால் அவனைத் தம் மனத்தில் உருவகப்படுத்தி அவனுடைய வடிவழகையும் திவ்ய குணங்களையும் ஆஶ்சர்ய மான செயல்களையும் ஸதா அநுபவித்துப் போது போக்கியவர் ஆழ்வார். இந்த அநுபவங்கள் பெரும்பாலும் கண்ணனைப் பற்றியவையாகவே இருக்கும். இவை தேன் என இனிக்கும்

Dr. V.V. ராமானுஜம்

தமிழ்ப்பாக்களாக **திருவாய்மொழி**யென ஆழ்வார் திருவாக்கில் வெளிவந்தன. இன்பமிகு இப்பாக்களைப் பாடியபோது மும்முறை அநுபவத்தின் முதிர்ச்சியால் ஆழ்வார் மோஹித்து ஒவ்வொரு தரமும் ஆறுமாதம் செயலற்றிருந்ததாக வரலாறு. இவற்றுள் முதல் முன்னம் மயக்கமுற்றது,

மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரவிடையாப்புண்டு
எத்திறம்! உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே!
(1-3-1)

என்ற அடிகளைப் பாடியபோது. கண்ணன் இடைச்சேரியில் ஆய்ச்சியர் கடைந்தெடுத்த வெண்ணெயைக் களவாடி உண்ட சரித்திரத்தை நமது ஆழ்வார்கள் பலபடியாகப் பேசி அநுபவித்துள்ளனர்.

ஸர்வஸ்வாமியும் **(எல்லாவற்றிற்கும் உடையவன்)** **அவாப்தஸமஸ்த காமனும் (குறையொன்றுமில்லாத நிறை**

வாளன்), ஸர்வசக்தியும் (எல்லாம் வல்லவன்) ஆன எம்பெருமான் ஒரு வஸ்துவைத் திருடி உண்பதே! அதற்காக ஒரு அபலைப்பெண் இவனைப் பிடித்து ஒரு உரலுடன் கட்டி வைப்பதே! இவனும் தன் திருடு வெளிப்பட்டதே என்று வெள்கி இடைப்பெண்கள் தன்னைக் கண்டு சிரிக்கும்படி கட்டுண்டிருப்பதே! என்ன ஆஶ்சர்யமிது! என்ன எளிமை: அன்பர்களான இடைச்சியர் தம்கையால் திரட்டியது என்பதால் இந்த வெண்ணெயில் அளவற்ற வ்யாமோஹம் கண்ணனுக்கு அத்தையுண்டுத் தன்னை அவர்கள் கட்டவும் அடிக்கவும் தன்னை எளியனாக்கிக் கொடுப்பதே! என்று ஆழ்வார்கள் ஆழங்கால் படுவர்கள். இப்படி ஆழ்வார் நெஞ்சையுருக்கி மோஹமுறச் செய்த விஷயத்தைக் கழித்துப் பேசுகிறார் மதுரகவி. நம்மாழ்வாரைப் பரமோத்தேச்யராகப் பற்றி ஏற்றிப்பாடும் தமது திவ்யப்ரபந்தத்தில், இதோ முதல் பாசுரம்:

கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன்—என்னப்பனில்
நண்ணித் தென்குருகூர்நம்பி என்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என்னாவுக்கே.

மெல்லிதான பல சிறு கயிறுகளை முடிந்த தாம்பினால் தன்னைக் கட்டும்படி ஆக்கித்தந்த பெருமாயனை எம்பெருமானைக் காட்டில், அன்புடன் கிட்டி, தென்குருகூர் நம்பி என்று ஆழ்வார் திருநாமத்தைச் சொல்லுகையில் என் நாவெல்லாம் இனிக்கா நின்றது. அம்ருதம் ஊற்றுமாறாதே இருந்தது. ஆழ்வார் மிகவும் ஈடுபட்ட வைபவத்தையும், அதற்கு நாயகனான கண்ணனின் பெருமையையும் பேசி, ஆழ்வாரையிட்டுப் பார்த்தால் அவை ஸாரமற்றவை என்று மதுரகவிகள் கழிக்கிறார் இப்பாசுரத்தில்!

ஆழ்வார் கலங்கி மயங்கி பேச இயலாமல் கிடந்த சரித்திரத்தை, இவர் தெளிந்து நின்று பேசுவது சத்ருக்னன் ராமஸௌந்தர்யத்தைக் காற்கடைக் கொண்டதையே நினை வூட்டுகிறது. இது இவருக்கு ஸாத்யமாவது, இவர் தமக்கு ஆழ்வாரே எல்லாமாக—தேவுமற்றறியேன்—என்று கொண்டு நிலைத்திருக்கையாலே.

இப்பாசுரத்துக்கு நமதாசிரியர்கள் இட்டுள்ள விரிவான வ்யாக்யானங்களிலிருந்து சில விஷயங்களைப் பேசி மகிழ்வோம். **கண்ணித்தாம்பு**—பல சிறு துண்டுகளை முடிந்துள்ளமையால் கட்டுண்டவன் உடம்பில் உறுத்தித் தழும்பேறப் பண்ணவல்ல கயிறு **நுண்தாம்பு**—நெருக்கிக் கட்டக்கூடிய மெல்லிய கயிறு. **சிறுத்தாம்பு**—இவனை உரலோடே சேர்த்துக்கட்ட எட்டம் போராதது. இதனால், **கட்டுண்ணப் பண்ணிய** — தன்னைக் கட்டத் தாய்படும் பாட்டைக் கண்டு வயிற்றை நெருக்கிக் கட்டுண்டான்.

கண்ணித்தாம்பினால் கட்டுண்டமையால் ஏறிய தழும்பு கள் நிலையாய் நின்று விட்டன இவன் உடம்பில். "தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை" என்ற (திருப்பாவை—5) சொற்களுக்கு ஆறுயிரப்படியில் விளக்கம்: 'அவனுடைய பந்தத்தை அநுஸந்திக்க, ஸம்ஸாரபந்தம் அறும். இவன் வயிற்றில் தழும்பைக் கொண்டாடுகை இவனைப் பெற்ற அவள் வயிற்றுக்குப் பட்டங்கட்டுவதாகும். "பணைகளிலே தாவினவாறே, உடைநழுவ, தழும்பைக் கண்டு இடைச்சிகள் சிரித்தார்கள். அத்தழும்பு தோன்றாமைக்கிறே நம் பெருமாள் கணையம் மேல் சாத்துகிறது" என்று ஜீயர்".

அவன் கட்டுண்டு நின்றதை நினைத்தால் ஸாம்ஸாரிகமான நமதுகட்டு விலகும். கண்ணன் உடை நழுவும்போது தழும்பு கண்ட இடைச்சிகள் கைகொட்டி எள்ளி நகைத்தனராம்.

"இன்றும் திருமஞ்சனத்தின் நடுவில் ஈரவாடை களைகையில் நம்பெருமாள் தமது இடுப்பில் யசோதை கட்டியதாலுண்டான தழும்பு தென்படும் என்று வெட்கமுற்று, உலர்ந்த வஸ்த்ரத்தை மார்பையும் கவருமளவுக்குச் சாத்தி உள்ளிருந்து ஈரத்தை வாங்கும்படி நியமித்துள்ளார்" என்று நஞ்சியர் ஸாதிப்பது. "ஸம்ஸாரபந்தஸ்திதி மோக்ஷஹேது:" என்று தன்னையொழிய யாவரையும் கட்டுகைக்கும் விடுவிக்கைக்கும் காரணமானவன் கிடீர் இப்போது ஒரு பெண் கட்டின கட்டை அவிழ்த்துக்கொள்ள இயலாமல் தைன்யத்துடன் இருந்தான்! என்ன ஆஶ்சர்யம்!

பெருமாயன் — நிரதிசய ஆஶ்சர்யயுக்தன். எல்லாம் நிறைந்துள்ளவனுக்கும் ஒரு குறையுண்டாய், தாழ்ந்த மனிசர் போல் வழியல்லா வழியான களவிலே இழிந்து அதையும் தலைக்கட்ட மாட்டாதே, கையும் வாயும் (சாக்ஷியாக) அகப்பட்டுக் கட்டுண்டு "பையவே நிலையும்" என்று உடம்பு வெளுத்து நின்ற நிலையளவும் சொல்லுகிறது. **என்னப்பன்**— ஆழ்வாருகந்த வஸ்துவாகையாலே இப்படிச் சொல்லுகிறார். அன்றியில் அவனே தன்னை இவருக்குக் காட்டக் கண்டு, சைதன்யமுடையவராகையாலே அந்த அழகிலிருந்து தப்ப முடியாமல் கொண்டாடுகிறதாகவும் கொள்ளலாம்.

நண்ணி — இத்யாதி — (இப்படிப்பட்ட கண்ணனிலும் காட்டில்) ஆழ்வாரைக்கிட்டி அவர் பெயரைச் சொன்னால் தித்திக்கும். "அப்பொழுதைக்கப்பொழுது என்னாராவமுதமே" என்று அவன் ஆழ்வாருக்கு திகட்டாத அமுதமாய் இருந்தான். இவர் நாவுக்கு ஆழ்வார் வற்றாத அம்ருத ஊற்றாக உள்ளதைச் சொல்லுகிறார். "இது என் அநுபவம். உங்களது எப்படியோ?" என்றபடி.

அநந்யார்ஹசேஷத்வம் என்பது ஆத்மாவின் சுத்த ஸ்வரூபம். "எம்பெருமானுக்கே (அவனடியாரும் அவனில் உள்ளிட்டவர்) அடியவனுவேன். எனக்குமல்லேன்; பிறர்க்கு மல்லேன்" என்றிருக்கையே இந்த ஸ்வரூபமறிந்தவரின் மன நிலை. மேலே சொன்னதில் பாசம் என்றது பக்தியை வேறு யாரையும் நேசிக்காத பக்திக்கே இவன் கட்டுப்படுவது. வேறுயாருக்கும் இஷ்டவிநியோகமல்லாததையே இவன் விரும்பிப் பயன் கொள்வது பசுக்களையும் கன்றுகளையும் கட்டவுதவாத கண்ணித்தாம்பிஞல் கட்டுண்டான் அநந்யார்ஹமான உரலுடன் கட்டுண்டான். (இதஞல் நமக்குப் பயனல்லாத வஸ்துவை அவனுக்கு இடல் நலம் என்று சொல்லவில்லை.) நான், எனது, என்ற எண்ணம் துளி யும் கலசாமல் அவனுக்கே என்று இடும் பொருளை, அவன் விரும்பி ஏற்கிறுன். அப்படியே ஆத்மாவையும் இதர தேவதா ஸம்பந்தமேதுமில்லாமல் தூய்மையுடன் அவனதாக்க வேண்டும். அவனுக்கே (அவனை முடிக்கவென்று எண்ணிஞ லும்) என்று பூதனை இட்டுவந்த விஷயத்தையும் "விடப் பாலமுதா அமுது செய்திட்ட மாயன்" என்கிறபடியே அம்ருதமாகவுண்டு மகிழ்ந்தவன் கண்ணன். "அநந்யாச் சிந்தயந்த : யே ஜநா: மாம் பர்யுபாஸதே" என்று ஒரு தேவை யிடுகிறுன் கண்ணன். அவனையே பெரும் பயனுகக் கருதி பக்தி பண்ணுமவரிடம் அவனுக்கு அளவற்ற வ்யாமோஹ முண்டு. அப்படிப்பட்ட அதிகாரிகள் ஆய்க்குலத்து ஆய்ச்சியர். அவர்கள் தம் கையால் திரட்டிய வெண்ணெய் என்றதாலே அதைக் களவு கண்டாகிலும் உண்டான்.

(தொடரும்)

கண்ணன் : அதோ ஐந்து தலைகளோடு கூடிய ஆதி சேஷன்மீது தெற்கே திருமுக மண்டலமாக நான்கு திருக்கைகளுடனும் புன்சிரிப்புடனும் சயனித்திருக்கும் ஸ்ரீரங்கநாதனை ஸேவி. திருநாபிக் கமலத்தில் பிரம்மாவும் திருவடியில் ஸ்ரீதேவி, பூதேவி நாச்சிமார்களும் எழுந்தருளியுள்ளனர். முன்னால் ஸ்ரீரங்க நாச்சியார் உத்ஸவரும், பஞ்சபேரங்களில் ஒருவரான ஸ்ரீரங்கநாதனும் எழுந்தருளியுள்ளனர். பிரதக்ஷிணத்தில் நான் முன்பே கூறியபடி திருவிக்ரமனும் (நடந்தான்) நரஸிம்மனும் (இருந்தான்) தனித்தனி ஸன்னிதிகளில் எழுந்தருளியிருப்பதையும் ஸேவி. இனி மலையிலிருந்து கீழே இறங்குவோமா?

பார்த்தன் : சரி ஸ்ரீரங்கநாதன் உத்ஸவரை மூலவர் ஸன்னதியில் காணவில்லையே? அவர் எங்கு எழுந்தருளியிருக்கிறார்?

கண்ணன் : நான்தான் முன்பே சொன்னேனே, மலையடிவாரத்திலுள்ள ஸன்னிதியில் ஸ்ரீரங்கநாதன் உத்ஸவர் கண்ணாடியறையில் எழுத்தருளியிருக்கிறார் என்று.

பார்த்தன் : ஆமாம் மறந்தே விட்டேன். அவர் மலைமீது எழுந்தருளுவது உண்டா?

கண்ணன் : ஆஹா! ப்ரம்மோத்ஸவ த்வஜாரோஹணத்தன்றும் த்வஜாவரோஹணத்தன்றும், புரட்டாசி பௌர்ணமி பூர்ணாஹுதியாக நடைபெறும் திருப்பவித்திர உத்ஸவம் மூன்று நாட்களிலும், பங்குனி உத்தரத் திருக்கல்யாணத்தன்றும், ஈடு உத்ஸவத்தன்றும் ஸ்ரீரங்கநாதன் மலைக்கு எழுந்தருள்கிறார்.

பார்த்தன் : அப்படியா? ஈடு உத்ஸவம் என்பது என்ன?

கண்ணன் : நன்று கேட்டாய், நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கு நம்பிள்ளை எனும் பரமாசார்யர் உபன்யசித்த உரையினை அந்த நம்பிள்ளையின் ஸத் சிஷ்யரான வடக்குத் திருவீதிப் பிள்ளை அப்படியே தொகுத்து அளித்த வ்யாக்யானத் தொகுதி ஈடு முப்பத்தாறாயிரப்படி வ்யாக்யானம் எனப் போற்றப் படும் ஒரு க்ரந்தம். இந்த ஈடு முப்பத்தாறாயிரப்படி வ்யாக்யானத்தை ஸ்ரீரங்கத்து எம்பெருமான் ஸ்ரீரங்கநாதன் தமது திருவரங்கம் பெரிய கோயிலிலே மணவாள மாமுனிகளை ஆசார்யனாக வரித்து அவர் மூலமாக ஒருவருஷ காலம் அனைத்து உத்ஸவங்களையும் நிறுத்தி காலக்ஷேபம் கேட்டு ஸந்தோஷித்து ஆசார்ய ஸம்பாவனையாக நம் மாமுனிகளுக்கு ஒரு குழந்தை ரூபத்தில் வந்து காலக்ஷேப சாத்துமறையன்று ஸ்ரீசைலேச தயாபாத்ரம் எனும் தனியனை சமர்ப்பித்தான். இந்த நன்னாளையே ஈடு உத்ஸவமாக, இங்கே கொண்டாடுகின்றனர். இவ்வுத்ஸவம் 3 நாட்கள் நடைபெறுகின்றன. ஆனித் திருமூலத்தன்று உத்ஸவர் ஸ்ரீரங்கநாதர் மணவாள மாமுனிகளுடன் மலைக்கு எழுந்தருளி அங்கு மூன்று நாட்கள் தங்கி ஈடு உத்ஸவம் எனும் விசேஷ வைபவ உத்ஸவத்தினையும் கண்டருள்கிறார்.

பார்த்தன் : மலையிலிருந்து இறங்கிவிட்டோமே. கோயிலுக்குள் நுழையலாம்.

கண்ணன் : கோயிலில் நுழைந்ததும் வலது பக்கத்தில் இருப்பதுதான் நீர்வண்ணன் ஸன்னிதி. நேரே எதிரில் இருப்பது அணிமாமலர் மங்கைத் தாயார் ஸன்னிதி. நீர்வண்ணன் ஸன்னிதிக்குப் பக்கத்தில் கண்ணாடியறையில் எழுந்தருளியிருப்பவர் ஸ்ரீரங்கநாதன் உத்ஸவர்.

பார்த்தன் : ஆஹா எல்லாரையும் ஸேவித்தாகி விட்டது. இங்கு நடைபெறும் விசேஷ உத்ஸவங்கள்...?

கண்ணன் : சித்திரைத் திருவோணம் தீர்த்தவாரியாக ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறுகிறது. பங்குனி உத்தரத்தன்று ஸ்ரீரங்கநாதனுக்கும் ஸ்ரீரங்கநாச்சியாருக்கும் திருக்கல்யாணம். மாசி உத்தரத்தில் நீர்வண்ணனுக்கும் அணிமாமலர் மங்கைத் தாயாருக்கும் திருக்கல்யாணம். இதுதவிர கார்த்திமாதம் வனபோஜன உத்ஸவமும் சிறப்பாக நடைபெறுகிறது.

பார்த்தன் : ஆஹா! உன்னுடைய கருணையால் நான் ஒரே நாளில் மூன்று திவ்யதேசங்களை ஸேவித்துவிட்டேன். இனி அடுத்த மாதம் நமது திவ்ய தேச யாத்திரையைத் தொடரலாம்.

ஸ்ரீராமாநுஜ வேதாந்தா சென்டர் நடத்தும் ஸ்தோத்ர பாட போட்டி 12-8-79 லிருந்து 2-9-79க்குத் தள்ளிப்போடப் பட்டிருக்கிறது. 18 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர் இதில் கலந்து கொள்ளலாம். போட்டி பிற்பகல் 2.00 மணிக்கு திருவல்லிக்கேணி கிழக்குக் குளக்கரை ஸ்ரீயதுகிரி எதிராஜ மடத்தில் தொடங்கும். மாலை 6.00 மணிக்கு பரிசுகள் வழங்கப்படும். போட்டிக்குரிய ஸ்தோத்ரங்கள் : ஸ்ரீவைகுண்டஸ்தவம், அதிமாநுஷஸ்தவம், ஸ்ரீஸ்தவம். போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் தங்கள் பெயர்களை 26 8-79க்குள் கீழ்க்கண்ட விலாஸத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

காரியதரிசி, ஸ்ரீராமாநுஜ வேதாந்த சென்டர்,
10, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி,
சென்னை 600 005.

அருளிச் செயல் அன்பர் அவை

ஸ்ரீமந் நாதமுனிகள், ஆளவந்தார் அவதாரஸ்தலம் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள காட்டுமன்னார் கோயில். அவ்வூர் அத்யாபக கோஷ்டியார் தற்போது நடைபெறும் ஆளவந்தார் உத்ஸவத்தில் ஒருநாள் நமது அருளிச்செயல் அன்பர் அவை அந்வயிக்க வேணுமென்று விரும்பினார்கள். அதன்படி சென்ற 5-8-78 அன்று நமது அவையைச் சேர்ந்த 15 சிறுவர்களும் 10 இளைஞர்களும் காட்டுமன்னார் கோயிலை அடைந்தோம். அன்று ஆளவந்தார் உத்ஸவத்தில் 8ம் திருநாள். காலை வீதிப்புறப்பாட்டில் திருமாலை கோஷ்டியும் பிறகு மத்யானம் திருமஞ்சனமாகி ஆளவந்தார் ஸ்தோத்ரரத்ன கோஷ்டியும் நமது அவையினரால் சிறப்பாக நடத்தி வைக்கப்பட்டது. திரும்பு காலையில் (திருவாலி) திருநகக்குச் சென்று திருமங்கையாழ்வாரை ஸேவித்துவிட்டு மீண்டும் திருச்சித்திரகூடம் (சிதம்பரம்) வந்தடைந்தோம். அன்று திருமூலத் திருநக்ஷத்திரமானபடியால் திருச்சித்திரகூடம் கோவிந்தராஜன் ஸன்னிதியில் ஸ்ரீமணவாள மாமுனிகளுக்குத் திருமஞ்சனமும், உபதேசரத்தினமாலை கோஷ்டியும் நடைபெறவே, நமது அவையினரும் இதில் கலந்துகொள்ளும் பாக்கியம் பெற்றனர்.

நமது அவையினரின் குறிக்கோள்களுக்காக நன்கொடையளித்துதவிய T. V. சுந்தரம் சாரிடீஸ் (ஸ்ரீ உ. வே. T. A. திருவேங்கடாசிரியர் ஸ்வாமி) அவர்களுக்கும் Divine Science Trust (ஸ்ரீ. உ. வே. A. K சடகோபாசாரியார்) அவர்களுக்கும் ஸ்ரீ. உ வே. P B. அநந்தாசாரியர் ஸ்வாமிக்கும் காட்டுமன்னார் கோயிலில் எங்களுக்கு எல்லா வசதிகளையும் செய்தளித்த ஸ்ரீ. உ. வே. ஸ்ரீனிவாஸாசாரியருக்கும் தீர்த்த காரர், திருச்சித்திர கூடத்தில் உதவிபுரிந்த ஸ்ரீ உ. வே. A. V. ரங்காசாரியர்க்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

P. T. விஜயராகவன் M.Sc., B.L.
காரியதரிசி.

அன்புள்ள கீதாசார்யரே!

காஞ்சி K. ஸ்ரீநிவாசன் மேட்டூர்

ஸ்ரீபாஷ்யம் தமிழாக்கம் வருவது பற்றி மிக்க மகிழ்ச்சி. ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியர் ஸ்வாமிக்கும், க. சந்தானம் அவர்களுக்கும் கீதாசார்யன் ஆசிரியர்க்கும் இதற்காகப் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

ராஜகோபாலன் பாம்பே.

மிக அழகாகக் கதைகள்தாம் எழுதுவார் சாண்டில்யன் என்று எண்ணியிருந்தோம். 'திருப்பாவையின் சிறப்பு பற்றிய தத்துவக்கட்டுரையும் எளிய முறையில் எல்லோருக்கும் புரியும் வகையில் எழுதி எங்களை திகைக்க வைத்துவிட்டாரே.

புவியரசன் ஸ்ரீவைகுண்டம்.

சாண்டில்யனின் திருப்பாவையின் சிறப்பு இடம் பெற்றது பொன்மலர் மணம் பெற்றிருப்பது போல உள்ளது.

S. முரளி ஜோதிநகர்.

திருநின்றவூரைப் பற்றியும் திருவள்ளூரைப் பற்றியும் வெளியிட்டுள்ள கட்டுரைகள் மிக அழகாகவுள்ளன. அதை விட வெகுஜோர் அட்டைப்படங்கள்.

உத்ஸவ விவரங்கள்

ஆவணி	ஆகஸ்டு	
1	17	ஆவணி மாதப்பிறப்பு
11	27	காஞ்சீ உலகளந்த பெருமாள் பவித்ரோத்ஸவாரம்பம்.
12	28	திருவல்லிக்கேணி நரஸிம்ஹஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
13	29	நாச்சியார் கோயில் திருக்கல்யாணம்
15	31	திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிஸ்வாமி பவித்ரோத்ஸவ அங்குரார்ப்பணம்.
	செப்.	
16	1	ஷை சதகலச திருமஞ்சனம்
17	2	ஸ்ரீரங்கம் பவித்ரோத்ஸவாரம்பவம்
28	13	ஸ்ரீ ஜயந்தி பெரியவாச்சான்பிள்ளை சாற்றுமறை
29	14	உறியடி உத்ஸவம்

ஸித்தார்த்தி உத்தராயணம் க்ரீஷ்மருதுகடகமீ

ஆகஸ்ட் 79 — செப்டம்பர் 79 — ஆவணி — 1155 — ஸிங்க ழீ

17	1	வெ	தச27-36,மிரு58-6.தி10-36;விஷ்ணுபதி.
18	2	ச	ஏகா 28-31, திரு60-0 தி20-15, ஸர்வை.
19	3	ஞா	துவா 3?-40,திரு1-23,தி30-34. ஸிம் கிரு
20	4	தி	திர33-53, புன5-45, தி27-32 [துவா-தி.
21	5	செ	சசி38-53, பூச 11-6, தி 46-19. [ஸ-அ,
22	6	பு	● 42-44, ஆயி 17-7, தி 50-18,
23	7	வி	பிர 47-42, மக 23-29, தி 45-36
24	8	வெ	துவி 52-30, பூரம் 29-50, தி 49-37.
25	9	ச	திரு56-46, உத்ரம்35-46, தி58-36, கல்கி ஜயந்தி. தாபஸ மனு,
26	10	ஞா	சதி60-0,ஹஸ்40-59,சேஷ2-36,ஸாமோபாகர்மம். விநாயக சதுர்த்தி,சதி-வ்ர.
27	11	தி	சதி0-9, சித் 45-10, தி 2-23, 59-52, ரிஷி பஞ்சமி
28	12	செ	பஞ் 2-22, ஸ்வா48-12,சேஷ3-52
29	13	பு	ஷஷ் 3-25, விசா 50-0, தி 2-37
30	14	வி	ஸப் 3-11, அனு 50-32, தி 0-5.
31	15	வெ	அஷ்1-40,நவ57-28.கேட்49-56. தி4-24
1	16	ச	தச 55-26, மூல 48-15, தி 9-22, 44-15, ஆவணிமூலம் [ஸ்ரீவை பரிவர்த்தனை கா.
2	17	ஞா	ஏகா50-56,பூராட45-44,தி11-15 ஸ்மா-
3	18	தி	துவா 45-47, உத்ரா 42-43, தி 4-40. 51-56 வாமன ஜ
4	19	செ	திர40-7,திருவோ38-50,தி48-9, ச்ர-வ்ர.
5	20	பு	சசி34-9,அவி34-47,தி51-33, அனந்த வ்ர
6	21	வி	○ 28-8, சத 30-42 தி 45-39.
7	22	வெ	பிர 22-13, பூர 26-44, தி 49-15, பாத்ர பகு, பிர-துவி திதி, மஹாளயபக்ஷ ஆரம்பம்
8	23	ச	துவி 16-33, உத்ரட் 23-1, தி 51-23.
9	24	ஞா	திரு11-17,ரே19-46,தி0 ஸ-சதி [பரணி
10	25	தி	சதி6-42, அசு17-13,தி7-38. 40-32, மஹா
11	26	செ	பஞ் 2-56, பர 15-30. தி 45-9, *
12	27	பு	ஷஷ் 0 13, ஸப்58-20,கார் 14-19.தி55-5.
13	28	வி	அஷ் 58-11, ரோ 15-13, தி 29-37, மடம்-முனித்-வைகா-பஞ்சராத்ர ஸ்ரீ ஜ
14	29	வெ	நவ 59-9, மி 16-54, தி38-56, மஹாவ்ய தீபா
15	30	ச	தச60-0, திரு19-51, தி51-53. [அவி நவ.
16	31	ஞா	தச 1-20, புன 23-56, தி 45-39, ஸி கி-ஏ-திதி.

கீதாசார்யன் பதில்கள்

புவியரசன் ஸ்ரீவைண்டம்.

அஷ்டாக்ஷரமந்திரம் என்பது யாது?

ஓம் நமோ நாராயணாய என்பதே திரு அஷ்டாக்ஷர மந்திரமாகும், இது திருமந்திரம் என்றும் மூலமந்திரம் என்றும் போற்றப்படும். நாலாயிர திவ்யப்பிரபந்தமும் இத் திருவெட்டெழுத்தின் பெருமையையே பகருகின்றன என்பது நமது பூர்வாசாரியர்கள் துணிபு. ஆக ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் உயிர்நாடியே இத்திருமந்திரம்தான்.

V சுந்தரவல்லி அம்பத்தூர்.

வைணவ சம்ப்ரதாரத்தில் வடகலைத் தென்கலைப் பிரிவுகள் தோன்றக் காரணம் என்ன?

இது ஒரு பெரிய சர்ச்சைக்குரிய விஷயமாகும் வடகலைத் தென்கலை வழக்குகள் பல வெற்றிகரமாக நடத்திவரும் பிரபல வழக்குரைஞர் ஸ்ரீ. உ. வே. V. N. வெங்கட வரதாசாரியர் ஸ்வாமி இது பற்றிய ஒரு சிறப்புப் பேட்டியை கீதாசார்யனுக்கு அளித்துள்ளார். அது அடுத்த இதழில் வெளியாகும். அதில் கண்டு தெளிவு பெறுக.

ஆஸ்திகரே!

சென்ற இதழில் நமது ஆண்டுவிழாவைப் பற்றி எழுதிய திலிருந்து கடிதங்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. பல யோசனைகளும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இளையவில்லி பூவராஹாசாரியர் M. A. (பெங்களூர்) பல அரிய யோசனைகளைத் தெரிவித்திருக்கிறார். எல்லாவற்றையும் பரிசீலித்து வருகிறோம். இன்னும் யோசனைகளைத் தெரிவிக்க விருப்பமுடையவர்கள் 1-9-79க்குள் எங்களுக்குக் கிடைக்கும்படி எழுதியனுப்புங்கள். எங்களது முடிவை அடுத்த இதழில் தெரிவிக்கிறோம்.

பிரபல எழுத்தாளர்களின் கட்டுரைகள் கொண்ட ஆண்டு விழா மலர் ஒன்றும் சிறப்பான முறையில் வெளியிடப்படும். அதற்கான நன்கொடைகளையும் விளம்பரங்களையும் அனுப்புமாறு மிகத்தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம், நன்கொடைகளை உங்கள் விருப்பப்படி எவ்வளவு வேண்டுமானாலும் அனுப்பலாம். விளம்பர விகிதம் :

முழுப்பக்கம் ரூ. 200 அரைப்பக்கம் ரூ. 125

அவரவர்கள் தங்களால் இயன்ற அளவில் பங்குகொண்டு எங்களை ஆதரிக்குமாறு மிகத்தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

Edited and Published by M. A. Venkata Krishnan and Printed at Guru Achagam, 19, Irusappa Gramani Street, Triplicane, Madras-600 005.



நீர்வண்ணன்

Regd. No 345 T N M.S. (c)

